விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 182 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 05 வியாழக்கிழமை (19.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சி

### தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையை இலங்கை தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவாகியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் சங்கு - சைக்கிள் கூட்டணி ஆட்சி

### தவிசாளராக தியாகராஜா நிரோஷ் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையை சங்கு - சைக்கிள் கூட்டணியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன இணைந்து கைப்பற்றியுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு நேற்றைய தினம் புதன்கிழமை வடக்கு மாகாண உள்ளூராட்சி

15ஆம் பக்கம் பார்க்க

# காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகளைத் தீர்க்குக

## ஐ.நாவில் இணைத் தலைமை நாடுகள்




(ஜெனிவா)

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்குமாறு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் இணைத் தலைமை நாடுகள் இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஈரான் - இஸ்ரேல் உக்கிர மோதல்

### மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

15ஆம் பக்கம் பார்க்க

## அழுகிய நிலையில் மானிப்பாயில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வடலித்தோட்டத்தில் முதியவரின் சடலம் ஒன்று நேற்றுப் புதன்கிழமை (18) பிற்பகல் அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் கெஹலிய அவரது மனைவி, மகள் கைது

### பிணை வழங்கப்பட்டும் நிபந்தனைகள் நிறைவேற்றாததால் சிறையில் அடைப்பு

(கொழும்பு)



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள்

02ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறை நகர சபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வசம்

### தவிசாளராக தவமலர் சுரேந்திரநாதன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபையைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக தவமலர் சுரேந்திரநாதன் தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளரை தெரிவு செய்வதற்

15ஆம் பக்கம் பார்க்க

## ஈரான் தனியாக இல்லை வட கொரியா முழு ஆதரவு

### தொடரும் போர்ப் பதற்றம்

(பியோங்யாங்)

இஸ்ரேலுடனான போரில் ஈரான் தனியாக இல்லை. நாங்கள் அவர்களுக்கு அனைத்து வகையான ஆதரவும் உதவியும் வழங்கத் தயார் என வட கொரியாவின் தலைவர் கிம் ஜொங் உன் தெரிவித்துள்ளமை போர்ப் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

வட கொரிய தலைவர் மேலும்

02ஆம் பக்கம் பார்க்க

மாகாண சபைத் தேர்தல்

## தீர்மானம் எடுக்கப்படவில்லை

### அமைச்சர் நளிந்த

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் நளிந்த

15ஆம் பக்கம் பார்க்க

## நடுநிலை வகித்ததால்

### தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவின்போது கட்சியின் அறிவுறுத்தலுக்கு மாறாகச் செயற்பட்ட பொன்னம்பலம் இராசேந்திரம் என்பவரது கட்சி உறுப்புரிமை நீக்கப்படுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன்

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காத்தும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து பற்றாக்குறை என்ற அச்சத்தை எதிர்க்கட்சிகள் தூண்டுகின்றன

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

மருந்து பற்றாக்குறை என்ற அச்சத்தை எதிர்க் கட்சிகள் பொதுமக்கள் இடையே தூண்டுகின்றன என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநா ட்டில் மருந்துத் தட்டுப்பாட்டு தொடர்பில் ஊடகவியலாளர் களின் கேள்விக்குப் பதிலளி க்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

அடுத்த சில மாதங்களில் இதைக் குறைக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். ஆனால் எதிர்க்கட்சித் தலை வர் ஊடகங்களுக்கு முன் னால் மேற்கோள் காட்டிய எண்கள் மருத்துவமனை களில் உள்ள உண்மையான இருப்பு அளவைப் பிரதிபலிக் கவில்லை என்று ஜயதிஸ்ஸ கூறினார்.

விநியோகத்தர்கள் டெண் டர்களுக்கு ஏலம் எடுக்காமல், அதற்குப் பதிலாக மருந்து களை சந்தைக்கு வெளியிட்டா லும் கூட, அரசாங்கம் கொள் முதலுக்காக ரூ. 35 பில்லி யனை ஒதுக்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

அரசாங்க மருத்துவ அதி காரிகள் சங்கத்தின் (GMOA) குற்றச்சாட்டுகள் குறித்து கரு த்துத் தெரிவித்த ஜயதிஸ்ஸ, மருந்து கொள்முதலை உப்பு அல்லது அரிசி போன்ற நுகர் வோர் பொருட்களை வாங்குவ தோடு ஒப்பிட முடியாது என் றார்.

இலங்கைக்கு மட்டும் மருந்துகளை உற்பத்தி செய் யும் உற்பத்தியாளர் யாரும் இல்லை. எங்கள் விநியோ கங்களில் குறிப்பிடத்தக்க பகுதி முன்பதிவு செய்யப் பட்டே செய்யப்படுகிறது. உற் பத்தி, மூன்று முதல் நான்கு மாதங்கள் வரை ஆகும். மேலும் முழு செயல்முறையும் ஒன்பது மாதங்கள் வரை ஆக லாம் என்று அவர் விளக்கி னார். முன்னைய நிர்வாகம் சரியான நேரத்தில் டெண்டர் களை வழங்கத் தவறியதே தற்போதைய சவால்களுக்குக் காரணம் என்று அவர் கூறி னார்.

முதல் ஐந்து மாதங்களுக் குள், நாங்கள் 268 டெண் டர்களை முடித்துவிட்டோம். அந்த மருந்துகளில் சில இப் போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மற்றவை நவம் பர் மாதத்திற்குள் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட முன்பதிவுகளும் நிலுவையில் உள்ளன என்று அமைச்சர் கூறினார்.

அரசாங்கம் தற் போதைய கொள்முதல் மற்றும் விநி யோக சிக்கல்களைத் தீர்க்க செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுமக் களிடையேயும் சுகாதார அமைப்பினுள் அமைதியின் மையை ஏற்படுத்த முயற்சிப் பதாக ஜயதிஸ்ஸ மேலும் குற்றம் சாட்டினார்.

சஜித் பிரேமதாஸவுக்கு இது தெரியும். அவர் ஒரு காலத்தில் துணை சுகாதார அமைச்சராக இருந்தார். தீர்வு காணாமல் பற்றாக்குறை இருப்பதாகக் கூறுவது மருந் துகளின் விலையை உயர்த்து வதை நோக்கமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு மட்டுமே பயனளிக்கிறது என்று அவர் கூறினார். (ம-4,7)

## காணாமல்...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான உயர்ஸ் தானிகரின் வருடாந்த அறி க்கை மீதான உரையாடலிற் காக இணைத்தலைமை நாடு களின் சார்பில் இங்கிலாந்தின் மனித உரிமைகளிற்கான தூதுவர் எலினோர் சான் டெர்ஸ் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில்,

இலங்கை குறித்த உங்கள் அலுவலகத்தின் பணிகள் குறித்து நாங்கள் நன்றியுடை யவர்களாக உள்ளோம்.

இலங்கையில் மேமாதம் தேர்தல்கள் நடாத்தப்பட்டதை நாங்கள் வரவேற்பதுடன், 2009ம் ஆண்டு ஆயுத மோத லின் போது இழக்கப்பட்ட உயிர்களை நினைவுகூருவது இம்முறை அமைதியான விதத்தில் இடம்பெற்றதை நாங்கள் கவனத்தில் எடுத் துள்ளோம்.

அதேவேளை மனித உரி மைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நல்லாட்சி, அரசமைப்பு சீர்திருத்தம் குறி த்து வழங்கிய வாக்குறுதி களை நிறைவேற்றுவதில் அர சாங்கம் சிறிதளவு முன்னேற் றத்தையே கண்டுள்ளமை குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

நீண்டகாலமாக நிலவும் தண்டனை விலக்கீட்டிற்கு அரசாங்கம் தீர்வைக் காண வேண்டும் என நாங்கள் வலியு றுத்துகின்றோம். மேலும் ஊடக வியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள், சிவில் சமூகத்தினர் சுதந்திரமாக, பாதுகாப்பாக செயற்படக் கூடிய நிலையை ஏற்படுத்து மாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அனைவரையும் உள்ளடக் கிய முழுமையான நல்லிணக் கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறை பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை பெறு வது மிகவும் முக்கியமானது.

அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதே தனது நிலைப்பாடு என தெரி வித்துள்ள போதிலும் பயங்கர வாதத் தடைச்சட்டம் தொடர் ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

மேலும் காணாமல்போனோர் அலுவலகத்தை மீண்டும் வலு ப்படுத்துவதன் மூலம் பலவந் தமாகக் காணாமல் ஆக்கப் பட்டோர் தொடர்பில் தீர்க்கப் படாத விடயங்களை தீர்க்கு மாறு நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள் கின்றோம் என்றுள்ளது.(ம-4,7)

## நடுநிலை...

அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட கடிதத்தில்,

இன்று(நேற்று) மதியம் நடைபெற்ற வலிகாமம் வட க்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவு களின் போது கட்சியின் மிகத் தெளிவான அறிவுறுத்தலுக்கு மாறாக நீங்கள் நடுநிலை வகித்துள்ளீர்கள், ஆகையால் உடனடியாக அமுலுக்கு வரும் படியாக கட்சி உறுப்புரிமை யில் இருந்து நீங்கள் இடை நிறுத்தப்படுகின்றீர்கள்.

தங்களது இந்த நடவடி க்கை சம்மந்தமான விளக்கம் ஏதும் இருப்பின் ஒரு வார காலத்திற்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும். இல்லையெனில் கொடுப்பத ற்கு விளக்கம் ஏதுவும் இல்லை என்ற அடிப்படையி லும் அல்லது ஏற்றுக்கொள் ளக் கூடிய விளக்கமாக இல் லாவிட்டாலும் கட்சியில் இருந் தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் உடன டியாக நீக்கப்படுவீர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-4,7)

A/L MEDIA
A/L 2025
Paper Class
என். கஜிதரன்
B.A(Hons) Spl.in.media studies
M.A (Mass Communi)
Dip in HRM, PGDE (Distinction)
✻அனுமதிகளையும் நேர அட்டவணையும் அலுவலகத்தில் பெற முடியும்.
✻தனிப்பாட அனுமதி உண்டு.
✻வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
வினாவிடை வகுப்பு நடைபெறும் நிறுவனங்கள்
☞ பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்
☞ பொருளியற் கல்லூரி சுன்னாகம்
☞ BARATHY சித்தன்கேணி
☞ உயர்கலைக் கல்லூரி கொக்குவில்
Zoom நிகழ்நிலை மூலமும் வெளி மாவட்ட மாணவர்கள் பங்குபற்ற முடியும்.
A/L Day Class வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Note : A/L 2026, A/L 2027 புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
077 395 6158
(C-3221)

## முன்னாள்...

ஆகியோர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளினால் நேற் றுக் கைது செய்யப்பட்டனர்.

நிதி மோசடி விவகாரம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக, குறித்த மூவரும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலை யாகியிருந்த வேளையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டும் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் இடம்பெற்றுவரும் விசாரணைக்கு அமை வாக, கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகி யோர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக்க கொழு ம்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க நேற்று (18) உத்தரவிட்டார்.

அதன்படி, சந்தேக நபர்கள் ஒவ்வொ ருவரும் தலா 50,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணை யிலும் விடுவிக்குமாறு நீதவான் உத்தர விட்டதுடன், சந்தேக நபர்களுக்கு வெளி நாட்டுப் பயணத்தடை உத்தரவையும் பிறப்பித்தார்.

இந்த வழக்கு நீதவானின் உத்தியோக பூர்வ அறையில் விசாரணைக்கு வந்தது, அங்கு இலஞ்ச ஊழல் விசாரணை

ஆணைக்குழு அதிகாரிகள் நீதிமன்றத் தில் சாட்சியங்களைச் சமர்ப்பித்தனர். இந்த சந்தேக நபர்கள் 97.35 மில்லியன் ரூபாவை சட்டவிரோதமாகப் பெற்றமை தொடர்பாக பணமோசடி தடுப்புச் சட்டத் தின் கீழ் நடத்தப்பட்ட விசாரணைக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப் பட்டதாகக் குறிப்பிட்டனர்.

குறித்த சந்தேக நபர்களின் சந்தே கத்திற்கிடமான பரிவர்த்தனைகள் குறி த்து இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு தகவல் அளித்ததாகவும், அதன்படி இந்த விசார ணைகள் நடத்தப்பட்டதாகவும் அதிகாரி கள் தெரிவித்தனர்.

அதன்படி, இந்த வழக்கின் இரண்டா வது சந்தேக நபரான முன்னாள் அமைச் சரின் மனைவிக்கும், மூன்றாவது சந்தேக நபரான மகளுக்கும் சொந்தமான தலா 30 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு நிலையான வைப்புகணக்குகள்விசாரணை களின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தாகக் கூறப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களுக்குச் சொந்தமான ஆயுள் காப்பீட்டுக் கொள்கைகள் குறி த்து விசாரணைகள் நடைபெற்று வருவ தாகவும், இந்த சந்தேக நபர்களுக்குச் சொந்தமான 150 இலட்சம் ரூபா வைப்பி லிடப்பட்ட மூன்று வங்கிக் கணக்குகள் வேறு நபர்களின் பெயர்களில் வைத்தி ருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ள தாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவித் தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்து சமர்ப் பணங்களையும் பரிசீலித்த நீதவான், சந்தேக நபர்களை பிணையில் விடுவித்து உத்தரவிட்டார்.

இந்த வழக்கு ஓகஸ்ட் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாகவும் நீதவான் அறிவித்தார்.

எவ்வாறாயினும், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெ லிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி குசும் பிரியதர்ஷினி மற்றும் மகள் சந்துல ரமாலி ரம்புக்வெல்ல ஆகியோர் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிய தால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ம-4,7)

## ஈரான்...

தெரிவித்துள்ளதாவது, இஸ்ரேல் என் றால் ஏதாவது நாடு அல்ல. அது மத்திய கிழக்கு பகுதியிலுள்ள அமெரிக்க இராணுவத் தளம் மட்டுமே. அதன் அனைத்து நடவடிக்கைகளும் வாஷிங்ட னின் கட்டளைகளுக்கே உட்பட்டவை.

அமெரிக்கா என்பது குற்றங்களுக்கு வழிவகுக்கும் ஒரு குற்ற நாடாகும். உல கின் மிகப் பெரிய அணுஆயுதக் களஞ் சியத்தை வைத்திருப்பது மட்டுமின்றி அணுகுண்டுகளை முதன் முறையாக பயன்படுத்திய நாடும் அமெரிக்காதான்.

எந்த நாடும் இஸ்ரேலுடன் சேர்ந்து ஈரானைத் தாக்க முயற்சி செய்தால், அதுவே எங்களுக்கெதிரான போர் அறி விப்பாகக் கருதப்படும். அப்படி என்றால் நாங்கள் நேரடியாகப் போர்க்களத்தில் இறங்கி, இஸ்ரேலை எங்கள் முழுப் படை வலிமையுடன் தாக்குவோம் என்றார்.

இந்த அறிக்கை உலகளாவிய மாறு பாடுகளை ஏற்படுத்தும் வகையில் பரபர ப்பை ஏற்படுத்தியுள்ளது. (ம-4,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நரித்தன அரசியலை நாங்கள் விரும்பவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் காட்டம்

(யாழ்ப்பாணம்)

**முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் இணைந்து அந்த அழிவை ஆதரித்தவர்களுடன் கூட்டு சேர்ந்து ஆட்சியமைக்கும் நரித்தனமான அரசியல் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றது என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றஞ்சாட்டினார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்.

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் யாருடனும் கூட்டு சேரவில்லை ஆயினும் எங்களுக்கான ஆதரவு அனைவராலும் வழங்கப்பட்டு வருகின்றது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அரங்கேற்றிய தரப்புகளுடன் சேர்ந்து கொண்டு - அந்த அழிவை ஆதரித்தவர்களுடன் இணைந்து ஆட்சியமைக்கும் நரித்தனமான அரசியலை நடத்தும் நபர்களாக சிலர் மாறியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சஜித் அணி தொடர்பில் கடந்த காலங்களில் பாரிய விமர்சனங்களை முன்வைத்தவர்கள், அவர்களுடன் சேர்ந்து தமது அரசியலை முன்னெடுக்கும் கேவலமான நிலை உள்ளது.

இப்படியானவர்களே எமக்கு எதிராக போலியான பிரச்சாரத்தை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றனர்." என அவர் காட்டமாகத் தெரிவித்தார். (க-8)

# கிளிநொச்சி குளத்திலுள்ள நீர்தாவரங்கள் அகற்றப்படும்

## பணிப்பாளர் ராஜேஸ்கண்ணா

(கண்டாவளை)

கிளிநாச்சி குளத்தில் பரவி வருகின்ற ஆகாயத்தாமரை உள்ளிட்ட நீர் தாவரங்களை விரைவாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாகாண விவசாய ஆராய்ச்சி பிரிவின் மேலதிக பணிப்பாளர் எஸ்.ராஜேஸ்கண்ணா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகரத்தின் மையப்பட்ட பகுதியில் அமைந்துள்ள கிளிநொச்சி குளத்தில் தற்போது ஆகாயத் தாமரை மற்றும் சல்பீனியா என்பன மிக வேகமாக பரவி வருகின்றது. இதனால் குளத்தின் நீர் மாசடைவதுடன் பல்வேறு பாதிப்புகளையும் எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இக்குளத்தினை நம்பி வாழும் நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாமலுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.


கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாய குழு கூட்டத்திலும் குறித்த கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட விவசாய ஆராய்ச்சி பிரிவின் மேலதிக பணிப்பாளர் எஸ்.ராஜேஸ் கண்ணா நேற்று புதன் கிழமை குறித்த குளத்தினை நேரடியாக பார்வையிட்டதுடன் நீர்த் தாவரங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-8-315)



கொழும்பு மாநகர சபையின் 26 ஆவது மேயராக தேசிய மக்கள் சக்தியின் விராய்கெலி பால்தார் நேற்று புதன்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

# மக்கள் விடுதலை முன்னணியுடனான உறவு மானசிகமானது- சீன வெளிவிவகார அமைச்சர்



(பீஜிங்)

மக்கள் விடுதலை முன்னணிக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் நிலவுகின்ற நீண்டகால நட்புறவை எவராலும் சிதைக்க முடியாதென்றும் அந்த நட்புறவை சிதைப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்றும் சீனாவின் வெளிவிவகார அமைச்சர் லியூ ஜின்தாவோ வலியுறுத்தினார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில், சீனாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தலைமையிலான குழுவினர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வெளி விவகார அமைச்சின் தலைமையகத்தில் சீனாவின் வெளி விவகார அமைச்சர் லியூ ஜின்தாவோ உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துரைத்தார்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டத்துக்கு எந்தவொரு வேளையிலும் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சீனா தயாராக இருப்பதாகவும் எந்தவொரு நாட்டின் தன்னாதிக்கத்துக்கும் குந்தகம் ஏற்படும் வகையில் சீனா செயற்படாது என்றும் லியூ ஜின்தாவோ இதன் போது தெரிவித்துள்ளார். (க-8)

# நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி பெண்

(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு எந்த வகையிலும் பெண்களுக்கு மட்டுமே உரிய பொறுப்பல்ல என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் பெண்களின் பொருளாதார பங்களிப்பை அதிகரித்தல்" என்ற தலைப்பின் கீழ் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், குழந்தைகளை பராமரிப்பது வெறுமனே பெண்களின் பொறுப்பாக கருதாமல் பெண்களின் தொழில் முறை சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது அவசியம். இது நாட்டின்பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான விடயமாகும்.

சிறுவர் பராமரிப்பை உறுதிப்படுத்துவதன் மூலம் பெண்களுக்கு அதிகமாக நாட்டின் பொருளாதாரத்துடன் இணைவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தி அவர்களுக்கு தொழிலாளர் படையில் உயர்ந்த முன்னேற்றம் கிடைக்கும் வழியை பெற்றுக் கொடுக்க வேண்டும். சம்பளம் பெற்றாலும், பெறா விட்டாலும் தமது உழைப்பை வழங்கும் பெண் பொருளாதாரத்தின் மையமான காரணியாகும்.

ஆனால், சமூக ரீதியாக அவர்களுக்குள்ள பல்வேறு தடைகளை எதிர்கொண்டு பெண்களுக்கு தொழிலாளர் படையுடன் இணைவதற்கு உள்ள வாய்ப்பு பெரிதும் வரையறுக்கப்பட்டுள்ளது என்றார். (க-8)

# கான்களில் எரிபொருள் நிரப்பினால் கடுமையான நடவடிக்கை

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பீப்பாய்கள் மற்றும் கான்களில் எரிபொருளை விற்பனை செய்வது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பீப்பாய்கள் மற்றும் கான்களில் எரிபொருளைப் பெறுவதற்காக பொதுமக்கள் தன்னிச்சையாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூடிவருவதாகவும், இதனால் தேவையற்ற நெரிசல் மற்றும் வரிசைகள் ஏற்படுவதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூட்டுத்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்கண்ட முடிவு எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அவர்கள் அதற்கு மாறாகச் செயற்பட்டால், கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் போதுமான எரிபொருள் இருப்பு இருந்தும், பொதுமக்கள் தேவையற்ற அச்சத்தை உருவாக்கி இவ்வாறு செயற்படுவதாகத் தோன்றுவதால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கான்கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை வெளியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மேலும் சுட்டிக்காட்டுகிறது. (க-8)

# பூஸா சிறையில் கைதிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர் நேற்று புதன் கிழமை சிறைச்சாலையின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.


பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. சிறைச்சாலைகளில் தொடர்ந்து விசேட சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், இதனால் நாம் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளோம்.

எனவே இந் நடைமுறையை உடன் நீக்க வேண்டும் எனக்கோரியே மேற்படி போராட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மெத்யூஸின் ஓய்வு குறித்து மனம் திறந்த ரோஹித்




பங்களாதேஷ்க்கு எதிரான தனது 119ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடி வரும் மெத் யூஸின் ஓய்வு குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் ரோஹித் சர்மா வாழ்த்துச் செய்தியொன்றை பகிர்ந்துள்ளார்.

உங்கள் அற்புதமான வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள். பல ஆண்டுகளாக எங்கள் 19 வயதுக்குட்பட்ட நாட்களில் இருந்து சில நல்ல போட்டிகளை நாங்கள் சந்தித்துள்ளோம்.

நீங்கள் உங்கள் நாட்டிற்கு ஒரு உண்மையான சேவையாளராக இருந்து வருகிறீர்கள். மேலும் உங்கள் நாட்டிற்காக நீங்கள் செய்ததை வீட்டில் உள்ள அனைவரும் பாராட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன்," என்று ரோஹித் கூறினார்.

சிவப்பு பந்து விளையாட்டிலிருந்து விடைபெறும் அதே வேளையில், 2026 ரி-20 உலகக்கிண்ணத்திற்கு பிறகு ஓய்வு பெறுவதை நோக்கமாகக் கொண்டு, வெள்ளை பந்து கிரிக்கெட்டில் தொடர திட்டமிட்டுள்ளதாக மெத்யூஸ் உறுதிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

## கிரிக்கெட் வரலாற்றில் முதல்முறை 3 சுப்பர் ஓவர் போட்டியால் பரபரப்பு

நெதர்லாந்து மற்றும் நேபாள அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டி ரி-20 வரலாற்றில் மூன்று சுப்பர் ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக வரலாறு படைத்துள்ளது.

ஸ்கொட்லாந்தில் நடைபெற்று வரும் முக்கோண தொடருக்காக கிளாஸ்கோவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்திலேயே இந்த பரபரப்பு இடம்பெற்றுள்ளது. இறுதியில் மூன்றாவது சுப்பர் ஓவரில் நெதர்லாந்து அணி போட்டியில் வென்றுள்ளது.

ஆரம்பத்தில் நெதர்லாந்து 157 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தபோது நேபாள அணி கடைசி ஓவரில் 16 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் 15 ஓட்டங்களை பெற்று போட்டியை சமநிலை செய்தது. இதனால் சுப்பர் ஓவருக்கு சென்ற ஆட்டத்திலும் இதே நிலை ஏற்பட்டது.




இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி 1 விக்கெட்டுக்கு 19 ஓட்டங்களை பெற நெதர்லாந்து அணியும் அதே ஓட்டங்களை பெற்றதால் ஆட்டம் மீண்டும் சமநிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாவது சுப்பர் ஓவருக்கு சென்ற ஆட்டத்திலும் முதலில் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 1 விக்கெட் இழப்புக்கு 17 ஓட்டங்களை பெற நேபாள அணி ஒரு ஓவருக்கும் விக்கெட் இழப்பின்றி 17 ஓட்டங்களை பெற்றது.

இதனால் மூன்றாவது முறையாக சுப்பர் ஓவருக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது. என்றாலும், முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாள அணி ஓட்டம் இன்றியே இரண்டு விக்கெட்டுகளையும் பறிகொடுத்ததால் நெதர்லாந்து முகம் கொடுத்த முதல் பந்தில் சிக்ஸர் விளாசி போட்டியை வென்றது.

ஆடவர் தொழில்முறை கிரிக்கெட் போட்டி ஒன்றில் இவ்வாறு நிகழ்வது இதுவே முதல்முறையாகும். (3)

## கப்டன் பதவியை நிராகரித்தது குறித்து பும்ரா விளக்கம்




இந்திய அணி இங்கிலாந்து சென்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் நாளை ஆரம்பமாகிறது.

இந்த தொடரில் இந்திய அணியின் கேப்டனாக சுப்மன் கில்லும் துணை கப்டனாக ரிஷப் பண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்கை ஸ்போர்ட்ஸ் கிரிக்கெட்டில் தினேஷ் கார்த்திக் உடனான உரையாடலின் போது, பும்ரா இவ்வாறு தெரிவித்தார்.

அந்த பேட்டியில் பேசிய அவர்,"ரோகித் சர்மா ஓய்வு பெற்ற நிலையில் டெஸ்ட் அணியின் துணை கப்டனாக இருந்த தன்னை கப்டன் பதவியில் நியமிக்க பி.சி.சி.ஐ. அணுகியது. இருப்பினும் பணிச்சுமை மற்றும் அடிக்கடி காயம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு அந்த வாய்ப்பை நான் நிராகரித்தேன்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடர் முழுவதும் என்னால் விளையாட முடியுமா என்ற சந்தேகம் இருக்கும்போது, நான் எப்படி கப்டன்சி செய்ய முடியும்? 3 போட்டிகளுக்கு ஒருவர் கப்டனாகவும் 2 போட்டிகளுக்கு மற்றொருவர் கப்டனாகவும் இருப்பது சரியல்ல. அணிக்கு எது முக்கியமோ அதைத்தான் நான் செய்தேன்

இந்திய டெஸ்ட் அணியை வழிநடத்துவது மிகப்பெரிய மரியாதை. ஆனால் கப்டன் பதவியை விட கிரிக்கெட்டை தான் நான் அதிகம் நேசிக்கிறேன். அதனால் ஒரு வீரராக இந்திய அணிக்கும் அதிக பங்களிப்பை வழங்க விரும்புகிறேன்" என்று தெரிவித்தார். (3)

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வோம்

### ஷர்துல் தாக்கூர் நம்பிக்கை




சுப்மன் கில் தலைமையிலான இளம் வீரர்களை கொண்ட இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆட உள்ளது. இந்த தொடரின் முதல் போட்டி வரும் நாளை லீட்சில் தொடங்குகிறது.

இந்த அணியில் ஆல்ரவுண்டரான ஷர்துல் தாக்கூரும் இடம் பிடித்துள்ளார். இந் நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெல்வோம் என ஷர்துல் தாக்கூர் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது.

அணியில் புதிய ஆற்றல் இருப்பது நல்ல விடயம். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் நிறைய இளம் வீரர்கள் இடம் பெற்றுள்ளார்கள். அணியில் திறமையான இளம் வீரர்கள் இடம்பெறுவது எப்போதும் உற்சாகமளிப்பதாக இருக்கும். இங்கிலாந்து அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய யுக்தியை பின்பற்றி விளையாடி வருகிறார்கள்.

வெளிநாடுகளில் தொடர்களைக் கைப்பற்றுவது எப்போதும் சிறப்பான விடயமாக இருக்கும். இங்கிலாந்தில் நாங்கள் தொடரைக் கைப்பற்றினால், அது ஒட்டு மொத்த இந்தியாவுக்கும் மிகப் பெரிய விடயமாக இருக்கும். இங்கிலாந்தில் தொடரை வெல்வோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான் கைது விவகாரம் ஜூலை 23 இல் விசாரணை

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை எதிர்வரும் ஜூலை 23 ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தன்னைக் கைது செய்து தடுத்து வைக்க, குற்றப் புலனாய்வுத் திணைக் களம் எடுத்த முடிவு, தனது அடிப்படை மனித உரிமை களை மீறுவதாக தீர்ப்பளிக் கக் கோரி பிள்ளையான் குறி த்த அடிப்படை உரிமைகள் மனுவை நீதிமன்றில் தாக் கல் செய்துள்ளார்.

இந்த மனு உயர் நீதி மன்றத்தின் நீதிபதிகள் எஸ். துரை ராஜா, மேனகா விஜே சுந்தர மற்றும் சம்பத் விஜே ரத்ன ஆகியோர் அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹ ர்ஷி ஹேரத், நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்து, மனுவுக்கு வரையறுக்கப் பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய இரண்டு வாரங்கள் அவகாசம் கோரி னார்.

அதன்படி, வரையறுக் கப்பட்ட ஆட்சேபனைகள்ள சமர்ப்பிக்க பிரதிவாதி தரப் பினருக்கு இரண்டு வார கால அவ காசம் அளித்த நீதி பதிகள் குழு குறி த்த திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஏதேனும் ஆட் சேபனைகளை தாக்கல் செய்ய மனுதாரர் தரப்பி னருக்கும் உத்தர விட்டுள்ளது. (க-8)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (2236)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திரு மணத்தடை, வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

No.139, Main Street Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்)
(4547)


# வெடித்தது இரட்டை எரிமலை விமானங்கள் பல ரத்து

(ஜகார்த்தா)

கிழக்கு சுற்றுலாத் தீவான புளோரஸில் உள்ள 1,703 மீற்றர் உயர இரட்டை சிகர எரிமலையான மவுண்ட் லெவோடோபி லக்கி-லக்கி நேற்றையதினம் வெடித்து சாம்பலைக் கக்கியதை அடுத்து அந் நாட்டின் எரிமலையியல் நிறுவனம் எச்சரிக்கை அளவை மிக உயர்ந்த நிலைக்கு உயர் த்தியுள்ளனர்.

இதனையடுத்து இந்தோ னேசிய ரிசார்ட் தீவான பாலிக் குச் செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் விமானங்களை இரத்து செய்துள்ளது . குறிப்பாக இந்தியா, சிங்கப்பூர் மற்றும் அவுஸ்திரேலியாவிலிருந்து பாலிக்கு செல்லும் பல சர்வதேச விமானங்கள் எரிமலை வெடிப்பு காரணமாக ரத்து செய்யப் பட்டதாக பாலி சர்வதேச விமான நிலைய தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-8)

# காற்று வேகமெடுக்கும் கடல் கொந்தளிக்கும்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் காற்று, மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வேகத் தில் வீசக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திரு கோணமலை மாவட்டத்திலும் மணிக்கு 30-40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதேவேளை, புத்தளம் முதல் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும், மாத்தறை முதல் அம்பாந் தோட்டை ஊடாக பொத்துவில் மற்றும் காங்கேசன் துறையிலி ருந்து முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரை யிலான கடற் பிராந்தியங்கள், கொந்தளிப்பாக காணப்படுவ துடன் கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை வரை யிலான கடற் பிராந்தியங்களில் கடலலையா னது. சுமார் 2 முதல் 2.5 மீற்றர் வரை மேலெ ழக் கூடும் என வளிமண்ட லவியல் திணைக் களம் எதிர்வு கூறியுள்ளது. (க-8)


3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.கந்தையா
துரைராசா
தோற்றம் -13.02.1928
மறைவு -22.06.2022
திதி–தேய்பிறை அபரபக்க நவமி
(19.06.2025)

4ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.கிருஷ்ணசுந்தரம்
ரஞ்சிதம்
தோற்றம் - 02.04.1960
மறைவு - 31.07.2021
திதி–பௌர்ணமி அட்டமி
(18.07.2025)

3ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.துரைராசா
அன்னக்கிளி
தோற்றம் - 21.11.1938
மறைவு - 21.09.2022
திதி–அபரபக்க ஏகாதசி
(17.09.2025)

எம்மோடு உலா வந்த ஒளி நிலவுகளே!
காற்றாகிப் போனீர்கள் கனவாகி வருவீர்களா!

[சி-1233]

மீளாத் துயரில் குடும்பத்தினர்


# இராசிபலன்

19.06.2025
ஆனி 05, வியாழக்கிழமை
அட்டமி முற்பகல் 9.03 மணிவரை

உத்தரட்டாதி முன்னிரவு 8.47 மணிவரை
சுப நேரம் 7.24-8.54 மணிவரை
இராகுகாலம் 1.24-2.54 மணிவரை
அட்டமி - நவமி

சந்திராஷ்டமம் ,
மகம், பூரம்.

வளவன்

**மேஷம்** நண்பர்கள் கடைசி நேரத்தில் உதவ முன்வ ருவர், மன அமைதி கூடும் நாள், வெளி யூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்,வழக்கத்தைவிட கூடு தல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிக ரிக்கும், வம்பு வழக் குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**துலாம்** நல்லவர்களின் தொடர் புகள் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தலைமைப் பதவிகள் உங்களைத்தேடி வரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேர லாம், பிற இனத்த வரால் பெருமைகள் வந்து சேரலாம், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**ரிஷபம்** மனதில்இனம்புரியாத சந்தோசம் குடிகொள் ளும் இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், செல்வாக்கு மேலோங் கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** உதவி செய்த சிலரை உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடை யலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழி பாட்டால் மகத்துவம் காண வேண் டிய நாள், ரோக பயமுண்டு.

**விருச்சிகம்** தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெற லாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், புண் ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவ முண்டு.

**கும்பம்** பொது வாழ்வில் மதி ப்பும் மரியாதையும் உயரும், கேட்ட இடத் தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட் டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொள் கைப் பிடிப்போடு செயற்படு வீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**கன்னி** பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், முயற்சி கள் கைகூடும்.

**தனுசு** எதிர்காலம் இனிமை யாக அமைய திட் டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்த சேரலாம்.

**மீனம்** குடும்ப இரகசியங் களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

கோபத்தை அன்பால் வென்றிடு. பாசத்தை விவேகத்தால் வென்றிடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள ஆற்றுப்படுத்தலின் தேவைப்பாடுகள் பாடசாலைகளில் அதிகம் உணரப்பட்டுள்ளது

## யாழ்.மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் தற்போது உள ஆற்றுப்படுத்தலின் தேவைப்பாடுகள் அதிகம் உணரப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் உளவளத் துணையின் செயற்பாடுகளின் தேவைப்பாடு உள்ளது என மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

உளவளத்துணை மற்றும் உள சமூகப் பணிகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையிலான உளசமூக மன்றக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைமையுரையாற்றும் போதே மாவட்ட செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தம் முடிவடைந்த பின்னர் உளவளத் துணைக்கான பாரிய தேவைப்பாடு ஏற்பட்டது. அதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வரும் பங்களிப்பு காத்திரமானது.

தற்போது உள ஆற்றுப்படுத்தலின் தேவைப்பாடுகள் அதிகம் உணரப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் உளவளத் துணையின் செயற்பாடுகள் தேவைப்பாடாக உள்ளது.

அதற்குக் கூட்டுப் பொறுப்புடன் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அதற்கான தீர்வுகளைக் காண வேண்டும்.

இக் கலந்துரையாடலின் நோக்கமானது உளவளத் துணை மற்றும் உளசமூகப் பணிகளை இணைந்த வகையில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதுடன், இவ் வேலைகளில் காணப்படும் இடைவெளிகளை இனங்கண்டு உளநலத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடலாக இது அமைய வேண்டும்என மேலும் தெரிவித்தார். (க-3-33)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால ஆங்கில கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை 21.06.2025 இற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

(யாழ்ப்பாணம்)
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகியகால கணனி பயிற்சிநெறி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை 21.06.2025 இற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரிக்கக் கோரிக்கை

(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரித்து தென்மராட்சிக்கான அபிவிருத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில், தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை காலா காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இது தொடர்பாக கோரிக்கை முன்வைத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தென்மராட்சிப் பிரதேசம் கிழக்கே எழுதுமட்டுவாழையும், மேற்கே நாவற்குழி கடல் ஏரியையும், வடக்கே வரணி தொடக்கம் முள்ளி வரையும், தெற்கே பூநகரி கடல் ஏரியும் அதன் எல்லைகளாக காணப்படுகின்றன.

எனவே சிறந்த பொருளாதார உட்கட்டமைப்பு, அபிவிருத்தி வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்த தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டாக பிரிக்க ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார். அத்துடன் கடிதப் பிரதிகளை வடக்கு ஆளுநர், அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-3-30)

# இலவச திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)
சென்ற மாதம் காலமான சிறந்த நடிகை மாலினி பொன்சேகாவுக்கு அஞ்சலியாக, அவர் நடித்த - எயா தன் லொக்கு லமயெக் (அவள் இப்போது பெரியபிள்ளை) என்ற சிங்களத் திரைப்படம், நாளை மறுதினம் சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு, 18/2, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் திரையிடப்படவுள்ளது.

1975 ஆம் ஆண்டு, 9 ஆவது மொஸ்கோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இத் திரைப்படத்தின் நெறியாளர், புகழ்பெற்ற தர்மசேன பத்திராஜ ஆவார். யாழ்ப்பாணத் திரைப் படக் கழகம் தனது மாதாந்த இலவசத்திரையிடலாக இதனை ஒழுங்கு செய்துள்ளது. (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 650 | 800 |
| தக்காளி | 400 | 400 | 450 | 350 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 250 | 220 | 200 |
| கோவா | 500 | 500 | 600 | 400 | 600 |
| கரட் | 800 | 750 | 800 | 650 | 700 |
| பூசணி | 120 | 140 | 150 | 150 | 200 |
| புடோல் | 120 | 150 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 150 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 450 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 120 | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 250 | 500 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 | 250 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 350 | 450 |
| பீற்றூட் | 400 | 500 | 500 | 380 | 500 |
| கறிமிளகாய் | 600 | 600 | 700 | 520 | 600 |
| முருங்கைக்காய் | 1400 | 1400 | 1200 | 1300 | 1500 |
| போஞ்சி | 600 | 600 | 700 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 30-60 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 100-170 | 150-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 600 | 600 | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | -- | 250 |

## வேலணை பிரதேச சபை
## ஸ்ரீ நயினாதீவு நாக பூசணி அம்மன் கோயில் வருடாந்த உயர் திருவிழா-2025
## பகிரங்க அறிவித்தல்

வருடாந்த உயர் திருவிழா 26.06.2025 ஆம் திகதி ஆரம்பமாகி 11.07.2025 அன்று நிறைவு பெறுவதனை முன்னிட்டு இக் காலப்பகுதியில் தற்காலிக வியாபார அனுமதியினைப் பெறுவதற்கு வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப அலுவலகத்தில் 23.06.2025 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

20.06.2025 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணிக்கு சபைக்கு சொந்தமான யாத்திரிகர் மட வளாகத்தில் தற்காலிக வியாபாரம், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கான இடங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குளிர்பானக்கடைகள், தேநீர் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துபவர்கள் முறையான தற்காலிக அனுமதிப்பத்திரம் பெற்று சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னரே தற்காலிக வியாபார அனுமதி வழங்கப்படும்.

ஏலத்தில் முதல்நிலை பெறுபவர் அன்றைய தினமே ஏலத்தொகையை முழுமையாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

உற்சவ காலத்தில் படகு மூலம் கொண்டுவரப்படும் விற்பனைப் பொருட்களுக்கான படகு அனுமதியினை குறிகட்டுவான் இறங்குதுறையில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஆலயச் சூழலில் வளர்ப்பு நாய்கள், மாடுகள் மற்றும் கட்டாக்காலி விலங்குகள் பொது வழிகளின் அருகில் கட்டி வைக்கப்படுதல் அல்லது அலைந்து திரிய விடுதல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் ஊடாக சபையினால் அனுமதி வழங்கப்பட்டவர்கள் மாத்திரமே முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலிருந்து சேவையில் ஈடுபட முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்

செயலாளர்
வேலணை பிரதேசசபை (சி-3222)

தொடர்புகளுக்கு
021 221 0180

# கடும் காற்று 4 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக வீசும் கடுமையான காற்று காரணமாக 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 4 குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, வேலணை மற்றும் உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் மொத்தமாக 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் வீடுகளும் பகுதிகளில் சேதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழி அகழ்வு செயலிழந்து போகக் கூடாது

## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

**செம்மணிப் புதைகுழி விடயத்தில் நீதி நிலைநாட்டப்படுவதுடன், புதைகுழிகளின் நீட்சி அறியப்பட வேண்டும். எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக் கூடாது என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

செம்மணிப் புதைகுழி தொடர்பாக வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்வறிக்கையில், படுகொலைகள், சந்தேகத்தின் பெயரிலான கைதுகள், காலவரையறையற்ற தடுப்புகள், விசாரணையற்று அல்லது விசாரணை முடிவுறுத்தப்படாது திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்யப்பட்ட சிறைவாசம், காணாமலாக்கப்படுதல் என்றவாறாக அடக்குமுறைகளின் வடிவங்கள் நீண்ட பட்டியலைக் கொண்டுள்ளன.

தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறைகளில் அதிகம் கவனம் கொடுக்கப்படும் விடயங்களாக இன்று வரை இருப்பவை, சட்டத்தின் பிடியால் இறுக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் தடுத்து வைப்பும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த நிச்சயமற்ற தன்மையுமே.

இவ்வாறானதொரு விடயப் பரப்பாக செம்மணிப் புதைகுழி விவகாரமும் விளங்குகின்றது. ஆயினும் தொடர்ந்தும் கைவிடப்படும் விடயமாக இனியும் இது மாறிவிடக்கூடாது எனும் அக்கறையை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாகப் பதிவு செய்கின்றோம்.

இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்தபோது காணாமல் ஆக்கப்பட்ட பலருக்கு இன்று வரை என்ன நடந்தது என்பது தெரியாத அவலநிலை தொடர்கின்றது.

இந்த நிலையே இறுதிப் போரின் போதும் நிகழ்ந்துள்ளது. அவர்களது உறவினர்கள் பல்லாண்டுகளாக தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள்.

செம்மணிப் புதைகுழி விவகாரம் இப்போது வெளிக்கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரிய வகையில் முன்கொண்டு செல்லப்படுகிறது. இந்த நிலை வலுவாக்கப்படவேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது. எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக்கூடாது என மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 29, முதலி கோவில் வீதி, வட்டாரம் - 09

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09, முதலிகோவில் வீதியிலுள்ள இல: 29 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதி வேட்டின் பிரகாரம் **அம்பலவாணர் சண்முகம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சிவசம்பூ ஜெயவீரசிங்கம்** ஆகியவர் குறித்த ஆதனமானது தனது முன்னோரான அம்பலவாணர் சண்முகம் ஆகியவரால் எந்தவித தடையோ, குறுக்கீடோ இன்றி இடையறாததும், தொடர்ச்சியுமாக ஆட்சி செய்யப்பட்டு வந்தது எனவும், அவர் வாரிசு எவருமின்றி காலஞ்செல்ல குறித்த ஆதனத்தினை தான் எந்தவித தடையோ, குறுக்கீடோ இன்றி ஆட்சி செய்து வருகிறதாகவும், குறித்த ஆதனம் இற்றைக்கு பத்து வருட காலமாக தனது இடையறாததும், தொடர்ச்சியுமான ஆட்சியில் இருந்து வருவதன் பிரகாரம் குறித்த ஆதனம் தனக்கே சொந்தமும், உரித்தும் உடையதாகும் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு P.V.ஸ்ரீரங்கன் முகதாவில் 2335/23.05.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றி யிருந்தார்.

**தியாகராஜா பத்மநாதன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு P.V.ஸ்ரீரங்கன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3262/22.09.2008ஆம் இலக்க உறுதியால் குறித்த **சிவசம்பூ ஜெயவீரசிங்கம்** ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**வேலுப்பிள்ளை தில்லையம்பலமும் பெண் அன்னலக்சுமியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு P.V.ஸ்ரீரங்கன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3621/17.01.2011ஆம் இலக்க உறுதியால் குறித்த **தியாகராஜா பத்மநாதனும் மனைவியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த **வேலுப்பிள்ளை தில்லையம்பலமும் பெண் அன்னலக்சுமியும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வேலுப்பிள்ளை தில்லையம்பலமும் பெண் அன்னலக்சுமியும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்க பிரதேசசபை,**
**சுழிபுரம்.**

(4569)



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### 15/4, மூளாய் வீதி, 4 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-11

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உபஅலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 11. மூளாய் வீதி 4 ஆம் ஒழுங்கையிலுள்ள இல: 15/4 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் மற்றொரு ஒரு பகுதியினை **கந்தையா கனகரத்தினம் பெண் நடேஸ்வரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2974/06.02.1983 ஆம் இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை காராளசிங்கம்** ஆகியவரிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**தெய்வேந்திரம்பிள்ளை சிவானந்தசோதியும் பெண் சசிகலாவும்** ஆகியவர்களுக்கு குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 720/14.07.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்கள் நிபந்தனையறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.
குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 1311/28.03.1987 ஆம் இலக்க உறுதியால் குறித்த **தெய்வேந்திரம்பிள்ளை சிவானந்தசோதியும் பெண் சசிகலாவும்** ஆகியவர்களிடமிருந்து மீள அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**முத்துத்தம்பி பஞ்சலிங்கம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1312/28.03.1987ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தின் மற்றொரு பகுதியினை **கந்தையா கனகரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ச.வை.சோமசுந்தரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14942/15.09.1984 இலக்க உறுதியால் **வேலுப்பிள்ளை காராளசிங்கம்** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**காத்தார் கணபதிப்பிள்ளை சிதம்பரநாதனும் பெண் அன்புமலரும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1238/14.11.1986 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி முழு ஆதனத்தையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**முத்துத்தம்பி பஞ்சலிங்கம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1473/05.03.1988 ஆம் இலக்க உறுதியால் குறித்த **கந்தையா கனகரத்தினமும் பெண் நடேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தில் மற்றொரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும், உரித்துமுடையவரானார்.

குறித்த **முத்துத்தம்பி பஞ்சலிங்கம்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **முத்துத்தம்பி பஞ்சலிங்கம்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்**

(4573)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## வாட்ஸ் அப்பிற்கு ஆப்பு



ஈரான், இஸ்ரேல் நாடுகளுக்கும் இடையேயான போரைத் தொடர்ந்து அணுசக்தி நிலையங்கள், இராணுவ நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இந் நிலையில், இஸ்ரேலுடன் மோதல் உச்சக்கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளதால், ஈரான் தமது நாட்டு மக்களை தங்கள் செல்போன்கள் மற்றும் இன்னபிற சாதனங்களில் இருந்து வாட்ஸ் அப் செயலியை நீக்குமாறு வலியுறுத்தி உள்ளது. ஈரான் அரசு தொலைக்காட்சியில் இவ்வாறு வலியுறுத்தல் வெளியிடப்பட்டது.


ஈரானில் இருந்து பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் இஸ்ரேலுக்கு அனுப்பப்படுவதாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையிலேயே இவ் அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளது.

இருப்பினும், ஈரான் அரசின் இந்த உத்தரவை வாட்ஸ் அப் நிறுவனம் உறுதியாக மறுத்துள்ளது.

இதுபோன்ற தவறான தகவல்கள் தங்களின் சேவைகளை பாதிக்கும். எனவும் பயனர்களின் தனியுரிமையை பாதுகாப்பதுதே எங்களின் கடமை என்றும் வாட்ஸ் அப் நிறுவனம் கூறியுள்ளது. (க-8)

## உச்சம் தொடும் அச்சம்

### தொலைபேசிகளுக்கு ஈரான் தடை



(டெஹ்ரான்)

கடந்த வருடம் லெபனானில் ஹிஸ்புல்லா படையினர் பயன்படுத்திய வாக்கிடாக்கியை ஒரே நேரத்தில் இஸ்ரேல் வெடிக்க செய்தது. இதனால் தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அரச அதிகாரிகள் மடிக்கணனி, தொலைபேசி போன்றவற்றைப் பயன்படுத்த ஈரான் தடைவிதித்துள்ளது.


ஈரான், அணுகுண்டு தயாரித்து ிட்டால், அது தங்களுக்கு பேராபத்தாக முடிந்துவி என்ற எண்ணத்தில் இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. பதிலுக்கு ஈரானும், இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறது.

ஈரான் அணுஆயுத நிலைகளை தாக்குவதற்கு சக்தி வாய்ந்த குண்டுகளை அமெரிக்காவிடம் இஸ்ரேல் கேட்டுள்ளது. இந்நிலையில் இரகசியங்களை தெரிந்து கொள்ள இஸ்ரேல் டிஜிற்றல் கண்காணிப்பை மேற்கொள்ளலாம் என ஈரான் அஞ்சுகிறது.

இதனால் உடன் அமுலுக்கு வரும் வகையில் அரச அதிகாரிகள் அனைவரும் தொலைபேசிகள் என்பவற்றைப் பாவிப்பதற்கு தடை விதித்துள்ளது. (க-8)

# உயிருடன் வாழ சரணடைவதே

## ஈரான் தலைவரை



**(டெஹ்ரான்) ■■■ ஈரானின் அயதுல்லா திருக்கும் இடத்தை நா அவரைக் கொல்லு போதைக்கு எமக்கி அமெரிக்காவைத் த அமைதியாய் இருக்க அனைவரும் நிபந்த டைவதே மிகச் சிறந் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

தனது சமூக வலைத்தளப் பக்கத்திலேயே ட்ரம்ப் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார். அவரின் பதிவில், ஈரானின் உச்ச தலைவர் என அழைக்கப்படும் அயதுல்லா காமெனி எங்கு மறைந்து இருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியும்.

அவர் எங்களுக்கு எளிதான இலக்கு. ஆனால் அவர் பாதுகாப்பாக இருக்கட்டும்.

குறைந்தபட்சம் தற்போதைக்கு அவரை கொல்லப்போவது கிடையாது. ஆனால் சாமானிய மக்களையோ, அமெரிக்க வீரர்களையோ தாக்குவதை நாங்கள் விரும்பவில்லை. எங்களது பொறுமை குறைந்து வருகிறது.

ஈரானிய தலைவர்கள் அனைவரும் நிபந்தனையின்றி சரணடையுங்கள் என ட்ரம்ப் கூறியுள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்குமிடையில் கடந்தவாரம் தொடங்கிய போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

உலக நாடுகள் போரை உடன் நிறுத்தக் கோரியிருந்த போதிலும் இரு நாடுகளும் போர் நிறுத்தத்திற்குத் தயாரில்லை எனவும் எம்மைத் தாக்கினால் பதில் தாக்குதல் நடத்துவோம் என்றும் பரஸ்பரம் அறிக்கையிட்டிருக்கின்றன.

ஈரானிடமிருந்து பத்து ஏவு

கனை இஸ் னை நிலை கிறது இ பல ஊட றன. அ ளை தாலு புத் நாடு

வர் மெ எங்க வெ மேல குரிய எ தங்க கொ வை வே விடு இ கார அதெ

## அடித்தால் அமைதியாய் இருக்க அடிமைகள் இல்லை நாம்

### அமெரிக்காவை எச்சரிக்கும் ஈரான்

ட்ரம்பின் மிரட்டலுக்கு அடி பணிய மாட்டோம் என்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு ஈரான் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி பதிலடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, "போர் தொடங்கிவிட்டது. பயங்கரவாத சியோனிச ஆட்சிக்கு நாம் வலுவான பதிலடி கொடுக்க வேண்டும். சியோனிஸ்டுகளுக்கு நாங்கள் கருணை காட்ட மாட்டோம்.

அமெரிக்கா எம்மை மிகவும் சாதாரணமாக நினைக்கிறது. நாம் பலம் மிக்கவர்கள். எம்மில் கை வைத்தால் விளைவு மோசமாக இருக்கும் என்று தெரிவித்தார். இந்நிலையில் ஈரானின் இராணுவத் தலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# ழு விரும்பினால்
# ு சரியான வழி
## ர எச்சரிக்கும் ட்ரம்ப்

**லா காமெனி மறைந் நாம் நன்கறிவோம். லும் எண்ணம் இப் கில்லை. ஆயினும் தாக்கினால் நாம் க மாட்டோம். எனவே தனையின்றி சரண றந்த தீர்மானம் என பதி டொனால்ட் ட்ரம்ப்**



கணைகள் ஏவப்பட்டால் இஸ்ரேலிடமிருந்து நூறு ஏவுகணைகள் ஈரானைத் தாக்கும் நிலையே தற்போது இருந்து வருகிறது.

இதனால் ஈரானின் பொதுமக்கள் பலர் கொல்லப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்திருக்கின்றன.

அமெரிக்காவின் செல்லப் பிள்ளையான இஸ்ரேல் எது செய்தாலும் அமெரிக்கா அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது. மாறாக மற்றைய நாடுகளை அதட்டும் எனவும் ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

ஈரானிடம்அணுஆயுதம் இருக்கக்கூடாது என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கும் நிலையிலேயே இஸ்ரேல் ஈரான் மீது போர் தொடுத்திருக்கின்றது.

இந்தப் போரை அமெரிக்கா நேரடியாக ஆதரிக்காமல் இருந்தாலும்,

அமெரிக்காவின் ஆசீர்வாதத்துடனேயே இஸ்ரேல் ஈரான் மீது போர் தொடுத்திருப்பது ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் பதிலில் தெளிவாகத் தெரிவதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் இஸ்ரேலின் கொடூரத் தாக்குதலில் இதுவரை 700 இற்கும் மேற்பட்ட ஈரானிய அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-8)

வர் மேஜர் ஜெனரல் அப்துல்ரஹிம் மௌசவி கூறும்போது "இதுவரை எங்கள் இராணுவ நடவடிக்கைகள் வெறும் எச்சரிக்கைகள்தான். மேலும் கடுமையான தண்டனைக்குரிய தாக்குதல்கள் தொடரக்கூடும்.

எனவே இஸ்ரேலியர்கள் தங்களது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள டெல் அவிப் மற்றும் ஹைபாவை விட்டு வெளியேற வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

இஸ்ரேல் - ஈரான் மோதல் காரணமாக ஜெருசலேமில் உள்ள அமெரிக்க தூதரகத்தை 3 நாட்களுக்கு மூடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நிலையில் மத்திய கிழக்குப் பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை ஈரான் தாக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (க-8)



# ஜி7 நாடுகள் கண்மூடிக் கிடக்கிறதா?

## கொதிக்கும் ஈரான்




கனடாவில் நடந்த ஜி7 மாநாட்டில், மத்திய கிழக்குப் பகுதிகளில் பதற்றம் தணிய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. மேலும், தன்னை தற்காத்துக் கொள்வதற்கு இஸ்ரேலுக்கு உரிமை உண்டு எனக் கூறப்பட்டது.

இது தொடர்பாக ஈரான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் இஸ்ரேலின் அப்பட்டமான ஆக்கிரமிப்பு செயலுக்கு, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ள 3 நாடுகள் அடங்கிய ஜி7 அமைப்பு தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டும். நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் வீடுகள், பொதுச் சொத்துகள் மற்றும் அரசு கட்டமைப்புகள் மோசமாக சேதமடைந்துள்ளன.

மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மையங்கள் குறிவைத்து தாக்கப்படுகின்றன. இந்த கொடூர ஆக்கிரமிப்பில் இருந்து தன்னை ஈரான் தற்காத்து கொள்கிறது. இதனைத்தவிர ஈரானுக்கு வேறு வாய்ப்பு ஏதும் இல்லை.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு உடனடியாக முடிவு கட்டினால் மட்டுமே இந்த பிராந்தியத்தில் நிலைமை ஸ்திரத்தன்மை பெறும். என்று கூறியிருக்கிறார். (க-8)

# எண்ணெய் கிடங்குகளை குறிவைத்தழிக்கும் இஸ்ரேல்



ஈரான் தலைநகரான டெஹ்ரானுக்கு அருகிலுள்ள கச்சா எண்ணெய் கிடங்கு, சுத்திகரிப்பு நிலையங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்கி வருகிறது. மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய சண்டை 6ஆவது நாளாக புதன்கிழமையும் தொடர்ந்து வருகிறது. இருநாடுகளும் போர் நிறுத்தத்துக்கு ஒத்துழைக்காமல் சண்டையிட்டு வருகின்றன.

இரு நாடுகளும் தாக்குதலை தொடருவதால் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இருந்தும், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இருந்தும் மக்கள் வெளியேற வேண்டும் என்று இரு நாடுகளும் பரஸ்பரம் எச்சரிக்கை விடுத்திருந்தது மட்டுமின்றி, ஈரானை அமெரிக்காவும் தாக்க வேண்டும் என்று இஸ்ரேல் கோரிக்கை வைத்திருந்தது.

அமெரிக்காவின் ஆதரவுடன் பங்கர் - பஸ்டர் குண்டுகளைக் கொண்டு ஈரானின் அணுசக்தி நிலையங்களை தாக்கி அழிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முதற்கட்டமாக இஸ்ரேலிய ஆயுதப்படைகள் டெஹ்ரானுக்கு அருகில் வடகிழக்கு நகரமான தாஜ்ரிஷில் கச்சா எண்ணெய் கிடங்கு, சுத்திகரிப்பு நிலையங்களை குறிவைத்து தாக்கி வருகின்றன. இத்தாக்குதலினால், தீப்பிழம்புகள் வெளியேறும் வீடியோக்கள் தற்போது இணையத்தில் வெளியாகி வருகின்றன.

பதிலுக்கு இஸ்ரேலை நோக்கி ஈரானும் சுமார் 10 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியிருப்பது போர்ப் பதற்றத்தை இன்னும் அதிகரிததுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - ஈரான் போர் சிக்கித் தவிக்கும் இலங்கையர்



இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் பலர் வெளிச்செல்லும் விமானங்கள் இல்லாததால் அங்கு சிக்கித் தவிப்பதாக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

தற்போது, ஈரானுடனான மோதல் காரணமாக இஸ்ரேலின் முக்கிய சர்வதேச விமான நிலையமான பென் குரியன் சர்வதேச விமான நிலையம் மற்றும் இஸ்ரேலிய வான்வெளி அனைத்து சர்வதேச விமானங்களுக்கும் மூடப் பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர் களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தூதரக அதிகாரிகள் அனைத்து முயற்சி களையும் எடுத்து வருவதாக தெரிவித்த இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதர் நிமல் பண்டார, இஸ்ரேலில் உள்ள அனைத்து இலங்கையர்களும் விழிப்புடன் இருக்கு மாறும், அதிகாரப்பூர்வ அறிவுறுத்தல் களைப் பின்பற்றுமாறும், அவசர நிலைகள் ஏற்பட்டால் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளவும் அறிவுறுத்தியுள் ளார். (க-8)

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
1இல்செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Law,France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15668

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:சதயம்
11இல்சூரி செவ்
கி-பா-19 1/2
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BSc,Managing Diretor
எதிர்பார்ப்பு: Graduates, அரச உத்தியோகம்
தொ.இ: B/15670

பிறப்பு:1995-RC
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, Printers
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15671

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா-42
உயரம்:5'7"
தகைமை/தொழில்-MBA, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15673

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:பூரம்
கி-பா- 72
1இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSc, Assistant Manager(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15674

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 45 1/4
உயரம்:5'3"
தகைமை/தொழில்: BA, DO(gov)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/11011

பிறப்பு -1999 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
1இல்செவ்
கி.பா: 24
உயரம்: 5'4"
தகைமை/தொழில் - A/L, தையல்.
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/15010

பிறப்பு-1988 - இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கிபா-37
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Degree, Teacher, (Australia).
எதிர்பார்ப்பு - Degree and Employee
தொ.இ: G/15003

பிறப்பு -1995-இந்து
நட்சத்திரம் -பூரட்டாதி
உயரம்:150CM
தகைமை/தொழில்:A/L விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு. விவாகரத்தானவர்
தொ.இ: G/14117

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:அனுசம்
3இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/14037

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# இன்று ஒரு தகவல் 398



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மானுட ஆசைகள்

ஒரு ராஜா! ஊரெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம் என்று ஒருநாள் புறப்பட்டுப் போனார். ஒரு இடத்திலே தறி நெசவு வேலை மிகவும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

ஒரு பெரியவர் செய்து கொண்டிருந்தார். தறியாலே நெசவு வேலை பக்கத்திலே ஒரு அழகான பெண் உட்கார்ந்து நூலை சுத்திக்கொண்டிருந்தாள். ராஜா அந்த பெரியவரைப் பார்த்து யார் இந்தப் பெண்? என்று விசாரித்தார். ராஜா இப்படிக் கேட்டதும் அவருக்கு ரொம்பப் பெருமையாக போய்விட்டது. ஏனென்றால் உட்கார்ந்திருந்தது அவருடைய மகள். "அரசே இது என் மகள் இவள் வேகமாக நூல் திரிக்கக் கூடியவள் வைக்கோலை எடுத்து இவள் திரிச்சால் கூட அது எல்லாம் பவுண் இழையாக வெளிவரும். அப்படி ஒரு இராசி இவளுக்கு" என்று ரொம்பப் பெருமையாக ராஜாவிடம் சொன்னார் அவர். ராஜா இதைக் கேட்டதும் அசந்து விட்டார். "அப்படியா? இவ்வளவு அழகும் சாமர்த்தியமும் உள்ள இந்தப் பெண் என்னோடு வரட்டும். இவளை என் மருமகளாக ஆக்கிக்கொள்ள விரும்புகிறேன்" அப்படி என்றார் ராஜா. அந்த பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ கொஞ்சம் பெருமையாக சொல்லப் போக அது இப்படி ஆகிவிட்டதே. என்று கவலைப்பட்டார். இருந்தாலும் ராஜா பேச்சைத் தட்ட முடியுமா? மகளை அனுப்பி வைத்தார். ராஜா அந்தப் பெண்ணை அரண்மனைக்கு அழைத்துகொண்டு வந்தார். அங்கே ஒரு அறையிலே வைத்துப் பூட்டி விட்டார். அந்த அறை நிறைய வைக்கோலை கொண்டுவந்து போட்டு அடைத்தார். மூன்று ராட்டைகள் வேறு வைத்திருந்தார்கள்.

"நாளைக்கு பொழுது விடிவதற்குள்ளே நீ இந்த வைக்கோலை யெல்லாம் தங்க இழைகளாக நூற்றுக் காட்ட வேண்டும். நாளை காலை வந்து நான் இந்த அறைக் கதவைத் திறப்பேன். உன் தகப்பன் சொன்னது போல எல்லாம் தங்கமாக மாறி இருக்க வேண்டும். இல்லை என்றால் நீ உயிர் தப்ப முடியாது" என்று உத்தரவு போட்டார் ராஜா. பாவம் அந்த பெண் பகல் முழுவதும் அழுதுகொண்டே உட்கார்ந்திருந்தாள். இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.மறுநாள் அதிகாலை நேரத்திற்கு யாரோ கதவைத் தட்டுகின்ற சத்தம் கேட்டது. பயந்து கதவைத் திறந்தாள். திறந்து பார்த்தால் வெளியிலே மூன்று அவலட்சணமான பெண்கள். ஒருத்திக்கு கால் அகலமாக முறம் மாதிரி இருந்தது. இன்னொருத்திக்குக் கட்டைவிரல் கரண்டி மாதிரி பெரிதாக இருந்தது. மூன்றாவது பெண்ணுக்கு உதடு தடிச்சி ரப்பர் மாதிரிதொங்கிக் கொண்டிருந்தது.

"யார் நீங்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள் இந்தப் பெண்! "நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கிறோம்" என்று சொல்லி உள்ளே வந்தார்கள். உட்கார்ந்தார்கள். கொஞ்ச நேரத்துக்குள்ளே உள்ளே இருந்த வைக்கோலையெல்லாம் தங்க இழைகளாக மாற்றிக் கொடுத்துவிட்டுபோயிட்டார்கள். காலையிலே ராஜா வந்தார். பார்த்தார். "ஆகா பேஷ்"என்றார். இன்னும் கொஞ்சம் வைக்கோலைக் கொண்டு வந்து அந்த அறையிலே போடச்சொன்னார். "இந்த வைக்கோலையும் இன்றைக்கு தங்கமாக மாற்றி விடு. நாளை மறுநாள் உனக்கும் இளவரசனுக்கும் கல்யாணம்" என்று சொல்லிவிட்டார். இன்று இராத்திரியும் அந்த மூன்று பெண்களும் வந்தார்கள்.

வைக்கோலை பொன் இழைகளாக மாற்றினார்கள். புறப்பட்டார்கள். இந்த பெண் அவர்கள் காலில் விழுந்து வணங்கினாள் "என் உயிரைக் காப்பாத்தினீர்கள். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்றாள். "பயப்படாதே நீ விரும்பினால் எங்களுக்கு ஒரு உதவி செய்யலாம் உன்னுடைய கல்யாணத்துக்கு நாங்கள் மூன்று பேரும் வருகிறோம். நீ எங்களை வரவேற்று ராஜாவிடமும் இளவரசரிடமும் நாங்கள் உன்னோட பெரியப்பா பெண்கள் என்று சொல்லி அறிமுகப்படுத்தி வை நாங்கள் விருந்து சாப்பிட்டுப் போகின்றோம்" என்றார்கள். ரொம்பவும் சந்தோஷமாக சரி என்று ஒத்துக்கொண்டாள். கல்யாண நாள் வந்தது. கல்யாணம் ரொம்ப கோலாகலமாக நடந்துகொண்டிருந்தது. எல்லா தேசத்து ராஜா ராணிகளும் வந்திருந்தார்கள். அந்த மூணு அவலட்சணமான பெண்களும் வந்து சேர்ந்தாதார். "யார் இவர்கள்?" என்று கேட்டார் ராஜா. "என் பெரியப்பா பெண்கள்" என்றாள் அந்தப் பெண்.

"காலும் உத்டும் கட்டைவிரலும் ஏன் உங்களுக்கு இப்படி அவலட்சணமாக ஆகி விட்டுது?" என்று கேட்டார். அதுக்கு அந்தப் பெண்கள் பதில்சொன்னார்கள். "என்ன செய்யறது? ஓயாமல் வைக்கோலை நூற்று ஒருத்தியோட கட்டை விரல் அப்படி கரண்டி மாதிரி ஆகிவிட்டது. நாக்கிலே தொட்டுத் தொட்டுத் திரித்து இன்னொருத்தி யோட உதடு அப்படி ஆகிவிட்டது.

காலாலே கட்டையை அழுத்தி தறி போட்டதினாலே இன்னொருத்தியோட காலு அப்படி ஆகிவிட்டது. உங்கள் மருமகளாக வந்திருக்கின்ற இந்தப் பெண் அந்த மூன்றையுமே செய்யத் தெரிந்தவள்.

என்ன ஆகப்போகின்றாளோ இன்னும் கொஞ்ச நாளிலே என்றார்கள். அவ்வளவுதான் ராஜா பயந்து விட்டார். "அம்மா! இன்றையிலேயிருந்து நீ இளவரசனின் மனைவி. நீ எப்பவும் அழகாக இருக்க வேண்டும். அதனாலே நீ இனிமேல் வைக்கோலை திரிக்கவே கூடாது" என்று உத்தரவு போட்டார் ராஜா. அவளை இக்கட்டான சூழ்நிலையிலேயிருந்து காப்பாற்றிய அந்த மூன்று பெண்களும் சந்தோஷமாக திரும்பிப் போய்விட்டார்கள் சுவாமி சின்மயானந்தர் சொல்லியிருக்கார்.

இந்தக் கதையை தன்னலம் மறந்து சுயலாபத்தைத் தியாகம் செய்வது வைக்கோலில் இருந்து தங்க இழையை நூற்பது மாதிரி என்கிறார், அவர். அது இருக்கட்டும் இப்போது நம் கதைக்கு வருவோம். ஒரு ராஜா தனனுடைய மகனுக்கு சுயம்வரம் நடத்தினார்.

எல்லா தேசத்திலே இருந்தும் ராஜகுமாரர்கள் வந்திருந்தார்கள். ராஜகுமாரியைக் கல்யாணம் செய்யலாம் என்கின்ற ஆசையிலே. சுயம்வர மண்டபத்துலேயிருந்து எல்லா ராஜகுமாரர்களும் அலறி அடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்துகொண்டு இருந்தார்கள் ஏன் இப்படி எல்லாரும் மிரண்டு போய் ஓடிவருகிறார்கள் என்று கேட்டார், ஒருத்தர்.

அதுக்கு இன்னொருத்தர் விபரம் சொன்னார். "ராஜகுமாரியை இன்னைக்குத்தான் அவர்கள் நேரிலே பார்த்தாங்களாம் அதுதான் இப்படி ஓடி வந்துகொண்டிருக்கிறார்கள்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கான உத்தரவாத விலையை வெளியிடுங்கள் - விவசாயிகள் கோரிக்கை!

**(தருமபுரம்)**

**நெல்லுக்கான உத்தரவாத விலையை அரசாங்கம் இதுவரை பெற்றுத் தரவில்லை. எனவே இதற்குரிய தீர்வை விரைவில் அரசாங்கம் வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்ட விவசாய குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. அதன் போதே விவசாயிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டதாவது,

இனிவரும் காலங்களில் சிறுபோக நெற்செய்கையில் அனுமதி வழங்கப்பட்ட பகுதிகள் மாத்திரமே நெற் செய்கைக்கு அனுமதிக் கப்படும். ஏனெனில் இதன் காரணமாக கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்படு கின்றன.

தற்பொழுது சிறுபோக அறுவடை ஆரம்பமாக உள்ள நிலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையி னால் நெல்லுக்கான உத் தரவாத விலை இதுவரை அரசாங்கத்தினால் தெரி விக்கப்படவில்லை. இதற் கான உரிய தீர்வு பெற்று தர வேண்டும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சிறிய குளங்களில் ஆகாயத் தாமரை அதிக அளவில் காணப்படுவதன் காரண மாக மக்கள் சுவாசிப்பதற்கு பெரும் சிரமப்படுகின்றனர். அத்துடன் குளத்தில் உள்ள நீர் அதிகளவில் வெப்பமாகி வெளியேறுவதனால் நுள ம்பு பெருக்கமும் அதிகரித் துள்ளது. எனவே மிக விரை வில் குளங்களில் காணப்படு கின்ற ஆகாயத்தாமரையை முழுதாக அகற்று வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள் ளதாக தீர்மானம் எட்டப்பட் டது. (8-316)



## பசுவின் கயிற்றில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்த சிறுவன்

பசுவின் கழுத்தில் கட்டப் பட்டிருந்த கயிற்றில் சிக்கி 9 வயது சிறுவன் உயிரிழந்துள் ளார்.

அநுராதபுரம், விஹார பாலு கம வித்யாராஜ வித்தி யால யத்தில் 4 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் குறித்த சிறுவன் கடந்த 13 ஆம் திகதி தனது சில நண்பர்களுடன் பக்கத்து வீட் டில் வளர்க்கப்பட்ட பசு வுடன் விளையாடிக் கொண்டி ருந்த போது, பசு திடீரென வீதியில் வேகமாக ஓடி யது.

அப்போது, பசுவின் கழுத் தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கிய சிறுவன், சுமார் 900 மீற்றர் தூரம் இழுத்துச் செல் லப்பட்டு, பலத்த காயங்களுடன் அநுராதபுரம் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில் சிறுவன் உயிரிழந் துள்ளார். (க-8)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் எதிர் வரும் 24.06.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு 51 டிப்பர் மணல் 8 டிப்பர் கிரவல் மற்றும் 2 டிப்பர் மண் ஏல விற்பனை நடை பெறவுள்ளது.

ஏலவிற்பனைப் பொருட் களை ஏல விற்பனை ஆரம்ப மாவதற்கு அரை மணித்தி யாலத்திற்கு முன்பாக பதிவா ளரின் அனுமதியுடன் பார் வை யிடலாம். என கிளிநாச்சி மாவ ட்ட நீதிவான் நீதிமன்ற பதிவா ளர் அறிவித்துள்ளார். (8)

## மனிதாபிமான செயற்பாட்டாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கரோலஸ் மனிதாபிமான கண்ணி வெடியகற்றல் பணியை ஆரம்பித்து 13வருடங்கள் நிறை தினமும் கரோலஸ் நிறுவனத்தில் 20 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவை யாற்றி வரும் பணியாளர் களையும் கௌரவிக்கும் நிகழ்வு கரோலஸ் முக மாலை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது கரோ லஸ் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் . Peter Hugh Scott Baker தலை மையில் நடைபெற்ற நிகழ் வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கதிபர் எஸ். முரளி தரன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்கதிபர் க.சிறீமோகன் உள்ளிட் டோர் கலந்து கொண்ட னர்.முகமாலைப்பகுதியில் அகற்ற வேண்டிய 10.5 சதுர கிலோமீற்றர் பரப்பள வில் 6சதுர கிலோ மீற்றர் கண்ணி வெடி அகற்றியுள் ளனர். (8-316)




இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிக்க செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த அலன்ரீன், கஜந்தன், ஜெரின் என்ற மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து சுற்றுலாப் பயணம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

## யாழ்.வண்.வடகிழக்கு வீரகத்தியானுக்கு கொடி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடகிழக்கு வீர கத்திப் பிள்ளையார் தேவஸ் தானத்தின் விசுவாவசு வருட பிரம்மோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்து ஜூலை 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்ச வமும் மறுநாள் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த் தோற்சவமும் அன்றைய தினம் இரவு கொடி யிறக்க நிகழ்வும் ஜூலை 4 ஆம் திகதி மாலை வைரவர் பொங்கல் நிகழ்வும் நடை பெறும். தினசரி காலை 10 மணிக் கும் இரவு 7 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார் என ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குரு வுமாகிய சிவஸ்ரீ.து.விவேகா னந்தக்குருக்கள் அறிவித்துள் ளார். மஹோற்சவ பிரதம குரு வாக சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.ஐங்கரன் குருக்கள் செயற்படுவார் என்பது குறிப்பி டத்தக்கது. (க-3-8)

## சட்டவிரோத மணல் அகழ்வு நால்வர் கைது

(தருமபுரம்)

பூநகரி பொலிஸ் பிரிவிற் குட்பட்ட குடமுருட்டி ஆற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்களும் அதன் சாரதிகளும் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டனர்.

அத்துடன் ஜெயபுரம் பகுதி யில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்ல முற்பட்ட பாலை மரக் குற்றி களுடன் பயணித்த கப்ரக வாகனமும் பொலிஸாரால் பறி முதல் செய்யப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 802



அவள் பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறாள் என்பது அவளுடைய பாதி மூடிய கண்களிலிருந்து தெரிந்தது. கண்களின் கரிய இமைகள் மூடித்திறக்கும் போதெல்லாம் விழிகளிலிருந்து மின்னலைப் போன்ற காந்த ஒளிக் கிரணங்கள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. இதிலிருந்து அவள் பார்ப்பதற்கு அரைத் தூக்கத்தில் இருப்பதாகத் தோன்றினாலும் அவளுடைய உள்ளம் உத்வேகத்துடன் சிந்தித்துக் கொண்டிருந்தது என்பது நன்றாகப் புலனாயிற்று.

இன்னும் சிறிது கூர்ந்து கவனித்துப் பார்த்தால், அவளுடைய பாதி மூடிய கண்களின் பார்வை அந்த அறையின் ஒரு பக்கத்தில் அகிற் குண்டத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருந்த புகைத் திரளின் மீது சென்றிருந்தது என்பதை அறியலாம். குண்டத்திலிருந்து புகை திரளாகக் கிளம்பிச் சுழிசுழியாக வட்டமிட்டுக் கொண்டு மேலே போய்ச் சிதறிப் பரவிக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போய்க் கொண்டிருந்தது. அந்த அகிற் புகைச் சுழிகளிலே நந்தினி என்னென்ன காட்சிகளைக் கண்டாளோ, தெரியாது. திடீரென்று அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். அவளுடைய பவள இதழ்கள், "ஆம், ஆம்! நான் கண்ட கனவுகள் எல்லாம் இந்தப் புகைத் திரளில் தோன்றும் சுழிகளைப் போலவே ஒன்றுமில்லாமல் போயின. இந்தப் புகைத் திரளாவது அருமையான நறுமணத்தைத் தனக்குப் பின்னால் விட்டு விட்டு மறைகிறது. என் கனவுகள் பின்னால் விட்டுப் போனவையெல்லாம் வேதனையும் துன்பமும் அவதூறும் அபகீர்த்தியுந்தான்!" என்று முணுமுணுத்தாள்.

அச்சமயம் "தேவி! தேவி! உள்ளே வரலாமா!" என்று மணிமேகலையின் மெல்லிய குரல் கேட்டது.

"வா, அம்மா, வா! உன்னுடைய வீட்டில் நீ வருவதற்கு என்னைக் கேட்பானேன்?" என்றாள் நந்தினி.

மணிமேகலை அந்தக் கதவைத் திறந்து கொண்டு மெல்ல நடந்துதான் வந்தாள். ஆனால் அவளுடைய முகத்தோற்றத்திலும் நடக்கும் நடையிலும் கையின் வீச்சிலும் உற்சாகம் ததும்பியபடியால் அவள் துள்ளிக் குதித்து ஆடிப்பாடிக் கொண்டு வருவதாகத் தோன்றியது.

நந்தினி சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த தந்தப் பீடத்தைக் காட்டி, அதில் மணிமேகலையை உட்காரச் சொன்னாள்.

மணிமேகலை உட்கார்ந்து கொண்டு, "தேவி! தங்களிடம் நான் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று என் தமையன் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறான். தென் தேசத்தாரின் நாகரிகத்தைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறான். கேட்காமல் கொள்ளாமல் திடீரென்று இன்னொருவர் அறைக்குள் நுழையக் கூடாது என்று தெரிவித்திருக்கிறான்!" என்றாள்.


"தென் தேசத்தாரும் அவர்களுடைய நாகரிகமும் நாசமாய்ப் போகட்டும். உன் அண்ணன் உனக்குச் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் உடனே மறந்து விடு! என்னைத் 'தேவி' என்றோ, 'மகாராணி' என்றோ ஒரு போதும் கூப்பிடாதே! 'அக்கா' என்று அழை!"

"அக்கா! அக்கா! அடிக்கடி உங்களிடம் நான் வந்து தொந்தரவு செய்வது உங்களுக்குக் கஷ்டமாயிராதல்லவா?" "நீ அடிக்கடி வந்து தொந்தரவு செய்வது எனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும் என்னை விட்டுப் போகாமல் இங்கேயே இருந்து விட்டாயானால் ஒரு தொந்தரவும் இராது!"

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்

# கரடியாரின் உதவி



நரியாருக்கு அன்று ஒரே சந்தோசம், அருமையான முயல் குட்டி ஒன்று கிடைத்திருக்கிறது. அப்படியே கவ்விக்கொண்டு போய் தன்னுடைய குகையில் வைத்து விட்டது.

இப்பொழுது பசியில்லை. என்றாலும், கிடைத்த இரையை விடவும் மனமில்லை. அதுவும், முயல் குட்டியாக வந்து நரியாரிடம் மாட்டிக் கொண்டது. குரங்கு ஒன்று மரத்தில் இருந்து கீழே பார்க்க, முயல் ஒன்று கண்ணீரும் கம்பலையுமாக அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருப்பதை பார்த்து என்ன விடயம் என்று தெரிந்து கொள்ள மரத்தை விட்டு இறங்கியது.

என்ன நண்பா? ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிறாய்? என்று கேட்டவுடன் முயல் கேவி கேவி அழுது கொண்டு என் பிள்ளையை காணவில்லை. இங்கு தான் விளையாடிக் கொண்டிருந்தான். நான் இரை தேட போய் வருவதற்குள் இவனை காணவில்லை. எல்லா இடங்களிலும் தேடி விட்டேன். என்ன செய்வது என்று தெரியவில்லை.

முயலின் அழுகையை கேட்டதும், குரங்கு சிறிது யோசித்து கேட்டது உன் மையன் எங்கு விளையாடிக் கொண்டிருந்ததாக சொன்னாய்? அதோ அந்த மரத்துக்கு பக்கத்தில்தான் விளையாடிக் கொண்டிருந்தான். எங்கும் செல்லக்கூடாது என்று சொல்லியிருந்தேன். அப்படியிருந்தும், சொல்ல சொல்ல முயலிற்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அழுகாதே, சற்று பொறு என் நண்பர்களை கேட்டு பார்க்கிறேன், எப்படியும் என் நண்பர்கள் அந்த மரத்தின் மேல் இருந்திருப்பார்கள், அவர்கள் பார்த்திருக்க வாய்ப்பு உண்டு. வா என்ன நடந்திருக்கும் என்று கேட்டுப்பார்க்கலாம்.

முயலை அழைத்துக் கொண்டு அந்த மரத்தடிக்கு வந்தது. மரத்தின் மேல் இருந்த நண்பர்களை அழைக்க அவர்கள் அனைவரும் கீழே வந்து என்ன வென்று விசாரித்தன.

முயலிடம் இங்கு ஒரு முயல்குட்டி விளையாடிக் கொண்டிருந்ததை நாங்கள் பார்த்தோம். சற்று தள்ளி ஒரு நரியார் தூங்கிக் கொண்டிருந்தார். அதையும் பார்த்தோம். முயல் குட்டி அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்ததால் ஒரு வேளை நரியாரிடம் மாட்டியிருக்கலாம் என்று சொன்னவுடன் ஓ என்று அழ ஆரம்பித்து விட்டது முயல்.

முயலை அழைத்து வந்த குரங்கு, பொறு அவசரப்படாதே, முதலில் நரி எங்கு போயிருக்கும் என்று தேடிப்பார்க்கலாம். எனக்கு தெரிந்து அரை மைல் தூரத்தில் ஒரு நரி இருப்பது தெரியும். அநேகமாக அங்குதான் இருக்கும், போய் பார்க்கலாம். முயலை அழைத்துக்கொண்டு அந்த இடம் சென்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களே தேசத்தின் எதிர்காலம் அவர்களின் மீது நீங்கள் செய்யும் முதலீடு உங்கள் எதிர்காலத்தின் மீதான முதலீடு. - *ஜவகர்லால் நேரு*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மானியம் வழங்கும் திட்டங்களை பகிரங்கப்படுத்துங்கள்

குறிப்பிட்ட தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவற்றுக்கு மானியம் வழங்குகின்ற நடைமுறை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவது வழமை.

உதாரணத்துக்கு நெற்செய்கை மற்றும் தென்னஞ் செய்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு மானியங்களும் உதவிக்கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

அதிலும் தென்னந்தோட்டங்களுக்கு இப்போது உரமானியம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

ஆகவே இந்தத் தகவல்கள் தென்னஞ் செய்கையாளர்களுக்கு தெரியப்படுத்தும்போது தான் தென்னஞ்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மானியம் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

எனினும் பொதுவில் மானியம் வழங்கப்படுகின்ற விடயம் பொதுமக்களை சென்றடையாததால், எங்கள் உற்பத்தியாளர்கள் மானியக் கொடுப்பனவுகளைப் பெறமுடியாமல் போகின்றது.

இவ்வாறான நிலைமையில் உற்பத்தியாளர்களும் உத்தியோகத்தர்களும் முரண்படுகின்ற சூழ்நிலையும் ஏற்படுகிறது.

உண்மை. மானியம் வழங்குகின்ற தகவல் தெரியாத காரணத்தால் மானியக் கொடுப்பனவுகளுக்கான பதிவுகள் தவறவிடப்படுகின்றன.

ஈற்றில் ஒரு தரப்பினர் மானியங்களைப் பெறுகின்றபோது, மற்றவர்களும் மானியத்துக்காக உரிய திணைக்களத்துக்குச் செல்கின்றனர்.

இங்குதான் அவர்களுக்குக் கிடைக்கின்ற பதில், உங்களுக்கு மானியம் இல்லை. நீங்கள் உரிய முடிவுத் திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளவில்லை என்பதாக உள்ளது.

அவ்வாறான கட்டத்திலேயே மானியத்துக்குப் பதிவு செய்கின்ற விடயம், எங்களுக்குத் தெரியாது என்ற தகவலை உற்பத்தி முயற்சியாளர்கள் முன்வைக்கின்றனர்.

இவ்வாறு விவசாயிகள் கூறுகின்ற சந்தர்ப்பம் ஏற்படுமாயின் அது மிகவும் அபத்தமானது மட்டுமன்றி, பாதிக்கப்பட்டவர்கள் கடுமையான வலியைத் தாங்க வேண்டியவர்களாகவும் இருப்பர்.

ஆகையால் யாருக்கெல்லாம் மானியங்கள், உதவிக் கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் அந்தத் தகவல்கள் பகிரப்பட வேண்டும்.

இதைவிடுத்து ஒரு குறிப்பிட்ட தரப்போடு மட்டும் தகவல்கள் மட்டுப்படுத்தப்படுமாயின், அதனால் அரச உத்தியோகத்தர்கள் தங்கள் சேவை தொடர்பில் பூரண திருப்தியடைய முடியாமல் போகும்.

ஆகையால்மானியம் மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்களைப் பொது வெளியில் பகிரங்கப்படுத்துங்கள். அது அரச கடமையில் முக்கியமானது என்பதை ஒரு போதும் மறந்துவிடாதீர்கள்.

# வலி.கிழக்கில் மலர்ந்தது தமிழ்த் தேசிய சக்திகளின் கூட்டிணைவு ஆட்சி

## தவிசாளர் நிரோஸ் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய சக்திகளின் கூட்டிணைவு ஆட்சியே வலி.கிழக்கில் மலர்ந்துள்ளது என்பதையிட்டு தமிழ்த் தேசிய கொள்கைக் கூட்டினரான நாம் பெருமைப்படுகின்றோம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

பதவியேற்றபின் ஊடகங்களுக்கு கருத்துரைக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் எமது மக்கள் தமிழ்த் தேசிய கொள்கை வழி அரசியலையும் இலட்சியபூர்வமாக நேசிக்கின்றனர்.

எமது இனம் அரசியல் ரீதியில் நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் விடயமாக உள்ளூராட்சி மன்றங்களை கருத முடியாது எனினும்,

அரசியலின் அடிப்படைத்தளம் என்ற அடிப்படையிலும் எமது கிராமங்களை நிர்வகிப்பதற்கான அலகு என்ற அடிப்படையிலும் இவ்வலகு கூட தேசிய அரசியலின் இருப்பிடமாகவும் கொள்கைவழிப் பயணத்தின் தளமாகச் செயற்பட வேண்டும்.

அந்த அடிப்படையில் ஏற்கனவே கொள்கைவழி கூட்டாக இயங்கும் தமிழ்த் தேசியப் பேரவை மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் முழுமையான உறுப்பினர்கள், உறுப்பினர் இ.ஐங்கரன் மற்றும் தொழிலதிபர் சுலக்சன் தலைமையிலான சுயேட்சைக்குழுக்களின் முழுமையான உத்தியோகபூர்வ பங்களிப்பு மற்றும் பகுதியளவில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி ஆகியன வெற்றிக்குத் தேவையான தமது பகுதியளவு பங்களிப்பினை நல்கியுள்ளன.

ஆகவே இங்கு அமையப்பெற்றது தமிழ்த் தேசிய சக்தியின் கூட்டு ஆட்சியாகும்.

சபையில் நாம் பெற்றதை வெற்றியாகக் கருத வேண்டாம். நாம் அடைந்துள்ளது தேசியத்தின் உறுதியான நிலைப்பாட்டுடன் கொள்கை வழி அரசியலை முன்னெடுப்பதற்கான பொறுப்பே எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் 5 வருடங்கள் சபையில் ஆட்சியை அரசியல் கட்சி பாரபட்சமற்ற வகையில் நான் முன்னெடுத்துள்ளேன். அவ்வாறாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உறுதியாகவும் ஊழலற்ற வகையில் கொள்கைவழி அபிவிருத்தியை முன்னெடுத்தமைக்கும் மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை மீறியபோது போராடியமைக்குமாகவே எவ்வித எதிர்பார்ப்புமின்றி ஆணையினை எமது சபையின் உறுப்பினர்கள் எமக்குத் தந்தார்கள். ஒத்துழைத்த உறுப்பினர்களின் ஒரே நிபந்தனை வலி.கிழக்கின் மாண்பை மேலும் உயர்த்துவதற்குப் பணியாற்ற வேண்டும் என்பதே என்றார். (ம-4,7)

# நயினை நாகபூசணி அம்மனை

## பக்தர்கள் சிரமமின்றி வழிபட சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படும்

### மகோற்சவ முன்னாயத்தக் கலந்துரையாடலில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உயர் திருவிழா எதிர் வரும் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் பக்தர்கள் எதுவித இடர்பாடுகளும் இன்றி வழிபடல் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள், அமுதசுரபி மண்டபம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையத்திற்கு தேவையானளவு குடிநீரை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சீராக வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மகோற்சவத்தின் சப்பறத் திருவிழா வரை 50 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சப்பறம், தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவன உற்சவங்கள் வரை மேலும் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களையும் சேவையில் ஈடுபடுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

திருவிழாக் காலங்களில் வழமைபோல் யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்துச் சேவை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் விசேட திருவிழாவான சப்பறம், தேர் மற்றும் தீர்த்த உற்சவங்களில் காலை 4.30 மணியிலிருந்து ஆரம்பமாகும் எனவும் ஒவ்வொரு அரை மணித்தியாலங்களுக்கும்சேவை இடம்பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டது.

குறிகாட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ரூபாய் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கடற் போக்குவரத்து (படகு) நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கைப் போக்குவரத்து பேருந்து சேவை நடைபெறவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

திருவிழாக் காலங்களில் நயினாதீவு கிராமங்களில் திருடர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடமாடும் சேவையினை ஈடுபடுத்துவது உள்ளிட்ட பக்தர் நலன் சார்ந்த பல தீர்மானங்கள் எட்டப்பட்டன.

மேலும் வைத்திய சேவை, சுகாதாரம், மின்சாரத் தேவை, அம்புலன்ஸ்சேவை, இலங்கை செஞ்சிலுவை மற்றும் சென் ஜோன்ஸ் படையினர் சேவை உள்ளிட்ட விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு.க. ஸ்ரீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ. தர்சினி, நாகபூஷணி அம்மன் ஆலயம் அறங்காவலர் சபைத் தலைவர் திரு.பரமலிங்கம், வேலணை பிரதேச செயலாளர் திரு.சிவகரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், இலங்கை போக்குவரத்துச் சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். (ம-4,7,104)

### தமிழரசு வெற்றியீட்டிய சபைகளில்

## ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவு நல்க வேண்டும் - சுமந்திரன்

(மன்னார்)

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு 35 உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க மக்களாணை கிடைத்துள்ளது. எனவே ஏனைய கட்சிகள் நாம் வெற்றியீட்டிய சபைகளில் ஆட்சியமைக்க ஆதரவளிக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,


உள்ளூராட்சி மன்றத் தேர்தலில்இலங்கைத் தமிழரசுக் கட்சி கூடுதலான ஆசனங்கள் உள்ள சபைகளில் ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும்.

இது மக்களாணைக் கிணங்க அவர்களது தார்மீகக் கடமை இக்கோட்பாட்டை பல கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன என்றார். (ம-4,7,285)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி பயணம் 09

புருசோத்தமன்



**மூன்றாம் நாள் விழா**

புதுச்சேரிக் கம்பன் விழாவின் 3 ஆம் நாள் விழா 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அமர்வில் சிந்தனை அரங்கம் முதன்மை பெற்றிருந்தது.

சிந்தனை அரங்கத்திற்கு பேராசிரியர் மு.இராமச்சந்திரன் தலைமையேற்றிருந்தார்.

ஆங்கிலத்துறைப் பேராசிரியரான இராமச்சந்திரன் யாழ்ப்பாணக் கம்பன் விழாவிலும் கலந்து கொண்டவர்.

சிந்தனை அரங்கில் புலவர் ம. இராமலிங்கம்,பேராசிரியர் தி.மு.அப்துல் காதர், இலக்கியச் சுடர் க.இராமலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர். அப்துல் காதரைத் தவிர ஏனையவர்கள் யாழ்ப்பாணக் கம்பன் விழாவில் பங்கேற்ற பேச்சாளர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தனியுரை இடம்பெற்றது.

தனியுரைக்கான நிகழ்ச்சி அமைப்பை ராம்ராஜ் காட்டன் நிறுவன அறக்கட்டளை பொறுப்பேற்றிருந்தது.

**நெடிது நின்றனன்** எனும் பொருளில் மாண்புமிகு நீதியரசர் இரா.சுரேஷ்குமார் உரையாற்றினார்.

இந் நிகழ்விற்கு ராம்ராஜ் காட்டன் அறக்கட்டளை நிறுவுநர் சே.ஆர்.நாகராசன் தலைமை வகித்தார்.

ராம்ராஜ் கொட்டன் வேட்டி, சேட் என்பன உலகம் முழுமையிலும் அறியப்பட்டவை என்பது தெரிந்ததே.

அந்த நிறுவனத்தின் உரிமையாளர் நாகராஜன் நிகழ்வில் தலைமையேற்றார் என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

மூன்றாம் நாள் விழாவின் மாலை அமர்வில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் ஏற்பாடாகியிருந்தன.

அதில் ஒன்று முத்து சில்க் ஹவுஸ் நிறுவன அறக்கட்டளையின் ஏற்பாட்டில் **வாழும் மறை** எனும் பொருளில் பாரதி கிருஷ்ணகுமார் அவர்களின் தனியுரை.

மிகச் சிறந்த பேச்சாளர், மனித நேயப் பண்பாளர், திரைப்பட இயக்குநர், யாழ்ப்பாணம் மற்றும் கொழும்புக் கம்பன் கழக விழாக்களில் பலமுறை பங்கு பற்றியவர்.

அவரின் உரைக்குள் நிறைந்த தகவல்கள் புள்ளிவிபர ரீதியாக அடங்கியிருக்கும்.



முத்து சில்க் ஹவுஸ் உரிமையாளர் பெ.நமச்சிவாயம் இந் நிகழ்விற்குத் தலைமையேற்றார்.

இதனைத் தொடர்ந்து புதுச்சேரிக் கம்பன் கழகத்தின் 58 ஆவது விழாவின் மூன்றாம் நாள் இறுதி நிகழ்வாக, **மேன் முறையீடு** இடம்பெற்றது.

வேல் சொக்கநாதன் அறக்கட்டளையின் நிறுவுநர் வேல் சொ.இசைக்கலைவன் முன்னிலையில், இடம்பெற்ற இம் மேன்முறையீட்டு மன்றிற்கு, மாண்புமிகு நீதியரசர் வி.இராம சுப்பிரமணியன், முனைவர் தெ.ஞானசுந்தரம், புதுச்சேரி கலெக்டர் ஈ. குலோத்துங்கன் ஆகியோர் நடுவராக அமர்ந்தனர்.

முதல் நாள் பட்டிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்வதன் பொருட்டே மேன் முறையீட்டு நீதிமன்று கூடியது.

இங்கு நோக்கர்கள் சார்பில் நோக்கர்களில் ஒருவராக இருந்த இரா.மாதுவும் இந்திரஜித் சார்பில் பர்வீன் சுல்தானாவும் மாரீசன் சார்பில் நானும் கும்பகர்ணனின் சார்பில் உமா தேவராஜன் அவர்களும் வாதிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம்.

மேன் முறையீட்டு மன்று கூடியது.

உண்மையில் அது ஒரு நீதிமன்றம் போலவே காட்சி தந்தது.

அந்த உணர்வோடு பேசுவதிலும் கடினம் இருக்கவே செய்தது.

மேன் முறையீட்டு நீதி மன்றில் பதிவாளராக சு.விஜய கிருஷ்ணன் கடமையாற்றினார்.

இவர் இந்திய தொலைக் காட்சியான தூரதர்சனில் முக்கிய பதவியை வகித்தவர். உயர்ந்த பண்புடைமையோடும் சிரித்த முகத்தோடும் தன் வகிபங்கை வெளிப்படுத்தினார்.

முதல் நாள் நடந்த பட்டிமன்றத்தில் நோக்கர்கள் வாக்களிப்பின் மூலம் வழங்கிய தீர்ப்பு, நடுவர் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் வழங்கிய தீர்ப்பு என்பன பற்றி தெளிவுபடுத்தி தனது அறிக்கையை மன்றில் சமர்ப்பித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றின் தொடக்கமே பதிவாளரின் அறிக்கையாக இருந்தது.

இத்தகைய மேன்முறையீடு எங்கள் யாழ்ப்பாணக் கம்பன் விழாவிலோ அன்றிக் கொழும்புக் கம்பன் விழாவிலோ இடம்பெற்றிருக்காததன் காரணமாக எனக்கு இது புதிய களமாகவே இருந்தது.

வழக்குப் பற்றிய பதிவாளரின் விளக்கத்தைத் தொடர்ந்து, நோக்கர்களின் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட மாரீசனுக்காக வாதிட வேண்டிய பொறுப்பு என்னுடையதாயிற்று.

இந்திரஜித்தை விட, கும்பகர்ணனை விட மாரீசனே ஒப்பற்ற தியாகம் செய்தவர் என வாதத்தை முன்வைத்த நான், நோக்கர்கள் வழமையில் தாம் ஆதரிப்பவருக்கே வாக்களித்துப் பழகியவர்கள். ஆனால் இங்கு நீக்குவதற்காக வாக்களித்தல் என்பது நிபந்தனையாக இருந்தாலும் பழக்க தோசம் காரணமாக நோக்கர்கள் வழமைப் பிரகாரம் வாக்களித்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் உண்டு என என் வாதத்தை முன் வைத்தேன்.

தவிர, கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோர் இராவணனின் சொத்தை அனுபவித்தவர்கள்.

இந்திரஜித் இராவணனின் மகன், கும்பகர்ணன் உடன் பிறந்த தம்பி. இவ்வாறாக உறவு நிலை இருக்கும் போது ஒப்பற்ற தியாகி என்ற வகைமைக்குள் அந்த இரண்டு பேருமே அடங்க முடியாது.

மாறாக, தன் உயிர் போகப் போகிறது என்பதைத் தெரிந்து கொண்டும் மாய மானாகப் போன மாரீசனே ஒப்பற்ற தியாகி.

மேலும், சீதையைக் கவர்ந்து செல்லுகின்ற இராவணனின் செயலை முதலில் கண்டித்தும் நீ அழியப் போகிறாய் என்று எச்சரித்தும் இராவணன் முன் நின்று அவனிடம் துணிந்து கூறியவன் மாரீசன் என என்வாதம் நகர்ந்தது.

நோக்கர்களால் நீக்கப்பட்ட - மாரீசனைபட்டிமன்றத்திற்கு நீதிபதியாக இருந்த கம்ப




வாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் மாரீசன் தியாகம் செய்யவில்லை என்று கூறி நோக்கர்கள் வழங்கிய தீர்ப்பை வழிமொழிந்த பின்னர், மாரீசனுக்காக வாதிடுவதென்பது மகா கடினம் என்று தெரிந்தும் என் கட்சிக்காரரான மாரீசனுக்காக என் வாதங்களைத் அடுக்கினேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை...

கான கூட்டம் நேற்றுப் புதன்கிழமை வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

16 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்கு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 7 ஆசனங்களையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 5 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஒரு ஆசனத்தையும் கைப்பற்றியது.

தவிசாளர் பதவிக்காக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட தவமலர் சுரேந்திரநாதனுக்கு 7 பேரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட மகாலிங்கம் மயூரனுக்கு 6 பேரும் ஆதரவு வழங்கினர்.

தேசிய மக்கள் சக்தியின் மூன்று பேரும் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர். (ம-7,4,33,60)



















## வலிகாமம் வட...

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு நேற்றுப் புதன்கிழமை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

35 ஆசனங்களைக் கொண்ட வலி வடக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 06 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 03 ஆசனங்களையும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 03 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 02 ஆசனங்களையும் தமிழ் மக்கள் கூட்டணி ஒரு ஆசனத்தையும் வென்றது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி சார்பில் தவிசாளர் வேட்பாளராக சோமசுந்தரம் சுகிர்தனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் பத்மநாதன் சாருஜனும் போட்டியிட்டனர்.

தவிசாளர் தெரிவைப் பகிரங்க வாக்களிப்பு மூலமாகத் தெரிவு செய்ய 24 உறுப்பினர்களும் இரகசிய வாக்களிப்புக்கு 10 உறுப்பினர்களும் நடுநிலையாக ஒரு உறுப்பினரும் வாக்களித்தனர்.

அதனையடுத்து பகிரங்கமாக நடைபெற்ற தெரிவில் சோமசுந்தரம் சுகிர்தன் 14 வாக்குகளையும் பத்மநாதன் சாருஜன் 09 வாக்குகளையும் பெற்றதையடுத்து சுகிர்தன் தவிசாளராகத் தெரிவானார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற உப தவிசாளர் தெரிவில் பொன்னுத்துரை தங்கராசாவும் தெரிவானார். (ம-7,4)

## வலிகாமம் கிழ...

ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

தவிசாளர் தெரிவில் மூவர் போட்டியிட முன்மொழியப்பட்ட நிலையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இரகசிய முறையிலான வாக்கெடுப்புக்கு சபையின் 36 உறுப்பினர்களில் 22 உறுப்பினர்கள் வாக்களித்திருந்த நிலையில் முதலாம் சுற்று இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் முதல் நிலை பெற்ற வேட்பாளர் பெரும்பான்மைக்குரிய வாக்கை எட்டாததால் மீண்டும் இரண்டாம் சுற்றுத் தெரிவு இரகசியமா? பகிரங்கமா? என்பது தொடர்பான வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்ட நிலையில் சமமாக வந்த நிலையில் திருவுளச் சீட்டு முறைமூலம் இரகசிய வாக்கெடுப்பு நடத்துவது எனத் தீர்மானித்து இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.

அதனடிப்படையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று சங்கு-சைக்கிள் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

உபதவிசாளர் தெரிவும் இரகசிய வாக்கெடுப்பு முறைமூலம் நடத்தப்பட்ட நிலையில் சங்கு - சைக்கிள் கூட்டணியின் உறுப்பினரான ஜனார்த்தனன் 14 க்கு 13 என்ற வாக்குகள் அடிப்படையில் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் இதுவரை உள்ளூராட்சி சபைகளில் நடுநிலை வகித்து வந்த தேசிய மக்கள் சக்தி வலி.கிழக்கில் தவிசாளர் தெரிவில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4,33)

## தீர்மானம்...

ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"மாகாண சபைத் தேர்தல் குறித்து ஸ்திரமான தீர்மானம் ஒன்று எடுக்கப் படவில்லை. சுமார் 8 மாத காலப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பன நடத்தப்பட்டுள்ளன. தற்போது மக்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய செயற்பட வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்த அனைத்துக் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு தான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான காலம் தீர்மானிக்கப்படும். அதற்கு முன்னர் இதனுடன் தொடர்புடைய சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. என்றார். (ம-7,4)

## மானிப்...

இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த வெங்காய வியாபாரியான கந்தமுத்து புஸ்பராசா (வயது-80) என்பவராவார்.

மனைவி இறந்த நிலையில் பிள்ளைகள் வெளிநாட்டில் உள்ளனர். தனிமையில் வசித்து வந்த அவர் பட்டா ரக வாகனத்தில் வெங்காய வியாபாரம் செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்றுப் புதன்கிழமை (18) வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசிய நிலையில் மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ் மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,4,60,104)

## ஈரான்...

மத்திய கிழக்கில் போர் சூழல் நிலவும் நிலையில், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல் அதிகரித்து வரும் நிலையில், மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.38 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 76.45 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. (ம-7,4)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3223) 076 825 7716 (ஆகாஸ்)

மணப்பெண் தேவை

1. சித்தங்கேணி, இந்து, 1983, அனுஷம், London Graduated, UK citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. திருநெல்வேலி, ரோமன் கத்தோலிக்கம், 1982, ரேவதி, Graduated, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (21418)
3. திருநெல்வேலி, இந்து, 1989, அத்தம், BSc (hons), UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(24452)
4. காரைநகர், இந்து, 1988, புனர்பூசம், MSc in Engineering, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(24112)
5. சண்டிலிப்பாய், ரோமன் கத்தோலிக்கம், 1982, BSc, Government officer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. இணுவில், இந்து, 1986, அஸ்வினி, IT Degree, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Masters, Canada + USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24750)
8. புங்குடுதீவு, இந்து, சதயம், 1985, MSc, Software Engineer, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (27327)
9. வண்ணார்பண்ணை, இந்து, சித்திரை, 1987, Masters(MBA), Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. காரைநகர், இந்து, சித்திரை, 1980, Bachelor of Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

(1244)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

# செம்மணி மனித புதைகுழி அகழ்வு
## ஆளுநரிடம் கேட்டறிந்த பிரிட்டன் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனித புதைகுழி தொடர்பில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ரூ பட்ரிக்ஸ் வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனிடம் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர், ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இங்குள்ள முதலீட்டாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதாக பிரிட்டன் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது ஆளுநரிடம் குறிப்பிட்டதுடன் முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் வினவினார்.

வடக்கில் அமையப்பெறவுள்ள மூன்று முதலீட்டு வலயங்களினதும் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக ஆளுநர் தெரிவித்தார்.

வேலை வாய்ப்புக்கான தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவை அவசியம் எனச் சுட்டிக் காட்டிய ஆளுநர், ஆட்சிமாற்றத்தின் பின்னர் முதலீட்டாளர்கள் இங்கு அதிகளவில் வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.



இளையோரிடத்தில் புலம் பெயர்வுக்கான சிந்தனை மேலோங்கியிருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொண்ட ஆளுநர், அவர்களுக்கான வேலை வாய்ப்புகள் இங்கே உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே முதலீட்டு வலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார். சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பிலும், விமான சேவை மற்றும் கப்பல் சேவைகள் தொடர்பாகவும் பிரிட்டன் தூதுவர் கேட்டறிந்து கொண்டார். யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான உள்ளூர் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் கட்டுநாயக்காவுக்கும் பலாலிக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிப்பது பெருமளவு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவக்கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர் இதற்குரிய கோரிக்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி, தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் மற்றும் செம்மணி புதைகுழி அகழ்வு என்பன தொடர்பாகவும் பிரிட்டன் தூதுவர் களநிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த காலங்களில் பிரிட்டன் அரசாங்கம் ஐ.நா.வின் முகவர் அமைப்புக்கள் ஊடாக பல்வேறு நிதி உதவிகளை வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர், தற்போதும் இந்தியாவிலிருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள அகதிகளுக்கான வாழ்வாதாரத்துக்கு உதவிகள் தேவை என்ற கோரிக்கையையும் ஆளுநர் முன்வைத்தார்.

மேலும், பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும் கிராமிய வீதிகள், கிராமிய உட்கட்டுமானங்களுக்கான தேவைகள் மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான தேவைப்பாடுகள் இன்னமும் உள்ளன எனவும் ஆளுநர் பிரிட்டன் தூதுவருக்கு தெரியப்படுத்தினார்.

(ம-4,7)

நீங்காத நினைவுடன்

மலர்வு
18.12.1954



உதிர்வு
19.05.2025

அமரர் சின்னத்துரை தயாபரன்

கடந்த 19.05.2025 திங்கட்கிழமை அன்று எங்கள் குடும்பத் தலைவர் சிவபதமடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையில் இருந்த வேளையில் எமக்கு ஆறுதல் கொடுத்த உள்ளங்களுக்கும் எம் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும், இரங்கலுரை ஆற்றியவர்கள், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும் சகல உதவிகளும் புரிந்த நேயங்களுக்கும் நன்றி கூறுவதுடன்.

எதிர்வரும் 21.06.2025 சனிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(4574)

இல.68, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 123 4719
077 640 8766
தகவல்:
குடும்பத்தினர்

English Classes

தனி மற்றும் குழுவாகவும் அல்லது Zoom மூலமும்
Gr 1 to O/L and For English beginners
♦ Grammar
♦ Spoken & School Syllabus
(4575)
T.P : 077 33 14 608

வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான் மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1242)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-3224)

சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகிறது.
45 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
(1237)
074 076 8566

பணியாளர் தேவை

சாவகச்சேரியில் உள்ள கல்அரிவு யாட் ஒன்றிற்கு கீழ்வரும் வேலைக்குரிய பணியாளர் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.
♦ கைக்கல்லு அரிபவர்
♦ மெசின் கல்லு அடிப்பவர்
♦ வேலித்தூண், கெவர் தூண் தயாரிப்பவர்
(1243)
தொடர்புகளுக்கு : 077 9400 963

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org